# கலை முரசு

# KALAI MURASU

කලයි මුරසු



கலை - 3

முரசு - 1

வளர்ச்சி
நிதிக்காக
ரூபா. 20/=

ஆசிரியர்: கலைத்தொண்டன் | இணை ஆசிரியர்: ஈழக்குயில்

பிரமாதி வருஷம் - சித்திரை - வைகாசி
ஹிஜ்ரி - 1420 - முஹர்ரம் - ஸபர்
1999 - ஏப்ரல் - மே - ஜூன்

பொது கலை இலக்கிய திங்கள் மலர்
(இந்து - முஸ்லிம் ஒற்றுமைப் பாலம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட விளக்கம்

1. மனிதனின் விஞ்ஞான நுட்பங்களும் உயிர்களைக்கொல்லும் அணு ஆயுதங்களும்.

2. மனிதனும் அவனது வணக்கஸ்தலங்களும் (கிறிஸ்டியன்ஸ், முஸ்லீம்ஸ், பௌத்தர், இந்து, பேக்கர்ஸ், நாத்திகர்கள்)

3. உயிர்கொல்லி நோயான "எய்ட்ஸ்" வைரஸ் பற்றிய அச்சம், பயங்கரம்.

4. அறிவுடைய மனிதனின் தீய பழக்கங்கள் (சிகரட், விஸ்கி, ஹீரோயின், மர்சுவானா)

5. இன்றய உலகில் பெண்களின் ஆசை, அச்சம், காமம்.

6. மனித உடலின் உயிர் எங்கே சென்றது?

அவனது ஆசைகள் எப்படி மறைந்தது?

மனிதன் + ஆசை = மரணம்

அட்டைப்படம்:-

பிரபல ஓவியக்கலைஞர்:

F. M. மக்கீன் - மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை முரசு
කලයි මුරසු
KALAI MURASU

5/B, மாருகொன,
உக்குவளை.
ஏப்ரல் - மே 1999

## முரசின் முழக்கம்

# கலைகளும், கலைஞர்களும்?

ஆயகலைகள் அறுபத்திநான்கு என தமிழ் கூறும் நல்லுலகம் வரையறை செய்கின்றது.

இக்கலைகளை தன்னுள் இலட்சியமாக கொண்ட மனித நேயங்கள் ஏதாவது ஒரு காரணத்தால் மூலைக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

காசுக்கு விலை போகும் கலைஞர்கள், தானும் செலவழித்துத் தனது இலட்சியத்துக்காக பாடுபட்டு இலட்சியத்தில் வெற்றி கண்டாலும் அடுத்த வேளை சோற்றுக்கு வழியின்றி முடங்கிப்போகும் கலைஞர்கள், பட்டத்தால், பதவியால், உயர்ந்தவர்கள் தனது இலட்சியக் கலைகளை இலாப, நஷ்டமின்றி நிறைவு செய்து நிம்மதி காணும் கலைஞர்கள்.

எது எப்படியிருந்தாலும் கலைக்கோலங்களை வடிவமைத்து சமுதாய மட்டத்தில் பரிணமிக்கச்செய்து அழகுபார்த்து ஆத்ம திருப்தி படுபவர்கள் கலைஞர்களே!

கலைஞர்கள் வாழும் வரை கலைகளும் வாழும். கலைகள் வாழவேண்டுமானால் கலைஞர்களும் வாழவேண்டும். (உயிருடன் அல்ல, பொருளாதார உயிரோட்டத்துடன்)

ஆக்க இலக்கியங்களை ஆக்கிப் படைக்கும் கலைஞர்கள் பாராட்டுக்கும், தாலாட்டுக்கும் ஆளாகும் போது; "களம்" அமைத்து ஊக்குவித்து உருவமைத்து தன்னையும், தன் பொருளாதாரத்தையும் அழித்துக்கொண்ட பத்திரிகையாளன் மட்டும் மறக்கப்படுகின்றான் அல்லது மறைக்கப்படுகின்றான். ஏன்? பத்திரிகையாளன் கலைஞன் இல்லையா?

இலட்சியக் கலைஞர்களுக்கு கைகொடுத்து உதவி, தன்னாலான பங்களிப்பை செய்ய வேண்டும் என்ற துணிவோடு மூன்றாவது சுற்று முழக்கத்தை உங்கள் கரங்களில் தவழ விடுகிறது கலைமுரசு.

நன்றி

- கலைத் தொண்டன் (ஆசிரியர்) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு சமர்ப்பணம்

சித்திரையாள் சிரிக்கின்றாள்!
புது முகத்தை காட்டுகின்றாள்!
இத்தரையில் தமிழ் மணக்க!
புது வாழ்த்து கூறுகின்றாள்!

சித்திரையாள் அழுகின்றாள்!
அழு முகத்தின் சோக வடிவம்!
ரத்தம்சிந்தி மனுக்குலம்;
அழிகின்ற அவலத்தை காட்டுகிறாள்!

அழுபவள் சிரிக்கவேண்டும்!
புத்தாண்டு மணக்கவேண்டும்!
இந்து-முஸ்லிம் ஒற்றுமையில்
புதுத்தெம்பு பெறவேண்டும்!
சித்திரையாள் புது வருகைக்கு;
வாழ்த்துரைத்துரைத்து
காணிக்கையாய் மலருமிந்த கலைமுரசு.

- புரட்சி தாஸன் -

## ஈழக்குயிலின் சிந்தனைகள்

"பணத்தைப் பெரிதாக எண்ணாதீர்
பணமே உனை படுகுழியில் தள்ளும்"

"கடமையைச் சீரழிக்காதே - அது உன்
வாழ்வைச் சீரழிக்கும்"

"உரிய பேறுகைகளை, உண்மையுடன் பெறின் - உனை
உயிருள்ளவரைக் காக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சம் பொறு....... கொஞ்சம் பொறு..... முரசொலி கேட்கிறதே!

-செய்திக் களம்-

## அக்கரையையும் இக்கரையையும் ஆட்டிப் படைக்கும் அரசியல்.

இந்து மகா சமுத்திரத்தின் அக்கரையான இந்தியாவில் சிறு கட்சிகளை நம்பித்தான் ஆட்சி அமைக்க வேண்டிய நிலைக்கு பெரும் கட்சிகள் தள்ளப்பட்டுள்ள. சிறு கட்சிகள் காலை வாரி விட்டால் ஆளுவோரின் கதி அம்போதான். பாரதீய ஜனதா கூட்டணியின் வாஜ்பாய் அரசுக்கு ஏற்பட்ட கதி அதுதான்.

இந்து மகா சமுத்திரத்தின் இக்கரையான சிறீலங்காவிலும் நடந்து முடிந்த மாகாண சபை தேர்தல்களிலும் பெருங்கட்சிகள் சிறு கட்சிகளை நம்பியே ஆட்சி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் சிக்கிக்கொண்டன. இங்கு சிறு கட்சிகள் என்பது சிறுபான்மை இனத்தின் ஆதரவைப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு ஜனநாயகம் தளைக்கிறது. இங்கு ஜனநாயகம் துடிக்கிறது.

## சிவில் நிர்வாகம் (மா?) சீர்கெட்ட நிர்வாகம் (மா?)

சிறீலங்காவின் யுத்த நெருக்கடி பிரதேசங்களான வடக்கு. கிழக்கு பிரதேசங்களின் சில பகுதிகளில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே.

இந்த அமைப்பில் அம்பாறை மாவட்டம் நீண்ட காலமாக சிவில் நிர்வாகத்தில் இருந்து வரும் பிரதேசமாகும். சிங்கள முஸ்லிம் மக்கள் கூடுதலாக செறிந்து வாழும் பகுதிகளில் எதுவித அசம்பாவிதங்களும் இல்லை. இடையிடையே தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிறுசிறு அசம்பாவிதங்கள் அவ்வப்போது நிகழ்வதுண்டு. இந்நிலையில் ஆயிரம் சென்றிகள் எதற்கு? வயோதிபர்கள், நோயாளிகள், பிள்ளைகுட்டிகளுடன் தாய்மார்கள் கட்டாயப்படுத்தி இறக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறார்கள். ஏன்? இதில் மனச்சாட்சியோ, மனிதாபிமானமோ, பாதுகாப்பு சட்டப்பிரமாணங்களோ தெரியாத அல்லது துஷ்பிரயோகம் செய்கின்ற பாதுகாப்பு ஊழியர்கள் சம்பந்தப்படுகிறார்களா? நீலாவணை சென்றியில் இருந்து பாண்டிருப்பு, காரைதீவு, வளத்தாப்பிட்டி, உகனை, அரன்தலாவ, (இடையிலும் ஏதோவொன்று) மகா ஓய, பதியதலாவ, மஹியங்கனை, ரண்தனிகல, இப்படி கியூ. திடீர் திடீர் என்று நீளும் அல்லது குறையும். அப்படியெல்லாம் இருந்தும் கண்டியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில், பதுளையில், இரத்தினபுரியில் என்று பல பகுதிகளிலும் குண்டு வெடிக்கிறது எப்படி?

ஆக மொத்தத்தில் மருதமுனையில் இருந்து கொழும்பு, பதுளை, மொனராகலை, மாத்தறை போன்ற தூர பகுதிகளுக்கு பயணம் செய்யும் பஸ் பயணிகளே கடும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆனால் மாத்தளை முதல் மாத்தறை வரை - பதுளை முதல் வவுனியா வரை பயணம் செய்யும் புகையிரதப் பயணிகளுக்கு இந்த சிரமங்கள் இல்லை. காரணம் - பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவை புகையிரதத்துக்குள்ளேயும், குறிப்பிட்ட பிரதான ரயில் நிலையங்களிலும் நடைபெறுகின்றது.

இஸ்திரமான சிவில் நிர்வாகப் பகுதியில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்புத் துறையினர் பயணிகளுக்கு சிரமம் இல்லாத புதிய அணுகுமுறை யுக்திகளைக் கையாண்டால் என்ன? என்பதே நாம் முன் வைக்கும் ஆலோசனையாகும்.

**உண்மைக்கு மறுபெயர் 'தாக்கமா?'**

ஒருவரைப்பற்றி அல்லது ஒரு குழுவைப்பற்றி குறை நிறைகளை எடை போட்டு நடுநிலை நின்று உண்மைகளை சுட்டிக்காட்டி எழுதுவது தாக்கமாகுமா?

ஒரு குழுவினரின் தவறுகளை சுட்டிக்காட்டியதற்காக அக்குழுவினரின் பலவகை இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் "ஓட்டமாவடி அரபாத்". உண்மையான ஒரு எழுத்தாளன் இவ்வாறு தாக்கப்படுகின்றபோது சுதந்திர எழுத்தாளர்களும் சேர்ந்து குரல் கொடுத்தால் இத்தகைய அடாவடி கோஷ்டிகளின் கொட்டமும் அடங்கும். எழுத்தாளர் ஒற்றுமையும் வளருமல்லவா?

**சாதனை**

"ஓர் ஆத்மாவின் பிரார்த்தனை" என்னும் தமிழ்மொழிப் பிரார்த்தனை நூலை ஈழக்குயில் இத்ரீஸ் அவர்கள் எழுதினார்கள். இந் நூலை அந்-நுஸ்ரத் தும், முப்லிஹுன் வெளியீட்டகமும் வெளியிட்டுள்ளன. சிறிய நூலாகக் காணப்படும் இந்நூல் இதுவரை பத்தாயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சாகியுள்ளது. மீண்டும் மூன்றாவது பதிப்பாக ஐயாயிரம் பிரதிகளை அச்சிட முப்லிஹுன் வெளியீட்டகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்படியானால் இதுவொரு "சாதனை" என்று கொள்ள முடியும்தானே.!

**தெரியுமா?**

**இலங்கையில் முதன் முதல் புதிய எழுத்து வடிவத்தை அறிமுகம் செய்த சஞ்சிகை எது தெரியுமா? கொலைத் தொண்டன், கொலைமுரசு என்றெல்லாம் பழிச்சொல்லுகளுக்கு இலக்கான "கலைமுரசு" தான். "தலைமை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பில் ஏக தெய்வக் கொள்கையில் திருக்குர்ஆனும், திருக்குறளும் போதிக்கும் கருத்துரை பற்றி "புரட்சிதாசன்" தொகுத்திருந்தார். சின்னப்பெட்டிக்குள் கட்டிப் பிரசுரிக்கப்பட்ட இவ்வாக்கம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 1962இல் தாக்கத்தை ஏற்படுத்திய இந்த புதிய எழுத்து வடிவம் இன்று சனரஞ்சிதமாக எடுபட்டுவிட்டது.

**வெளிச்சத்துக்குள் இருட்டா?**

"வெளிச்சம்" என்னும் பெயரில் மாதப்பத்திரிகையொன்று வெளிவருவது யாவரும் அறிந்ததே. நடுநிலைப் பத்திரிகை என தன்னை இனம் காட்டிக்கொள்ளும் இந்த பத்திரிகை குறிப்பிட்ட ஒரு அமைச்சரை, ஒரு கட்சியை எப்பொழுதும் சாடிக்கொண்டே இருப்பதுதான் நடுநிலையா? "நடுநிலை, சுதந்திரம்" என்ற தாத்பரியம் வெளிச்சத்துள் இருட்டாகத் தெரிகிறது.

(கிட்டிய செய்திகளை தட்டிக்கொட்டி தொகுத்தவர் நமது புரட்சி நிருபர்- இபுனு சித்தங்குட்டி ஆலிம்.)

**இன, மத பேதமின்றி தமிழ்மொழி மூலம் எழுதக்கூடிய அனைவரும் தமது படைப்புகளை எழுதி அனுப்பலாம். பிரசுரமாகும் தரமான ஆக்கங்களுக்கு 'சன்மானம்' வழங்கப்படும்.**

**THE EDITOR,**

**KALAI MURASU**

**5/B, MARUKONA,**
**UKUWELA. 21300**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமுதிர்ச் சோலையிலே............

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்கிறது தமிழ்ப் பழமொழி.

அடுப்பெரித்து பானையில் நீர் ஊற்றி அரிசியை அரித்து அந்த நீர் பானையில் போட்டு கொதிக்க வைத்தால் நீரும் வற்ற அரிசியும் வெந்து சோறாகி விடும். நீர் வற்றி விட்டது தெரிகிறது. ஆனால் பதமாக வெந்து விட்டதா? என்று பார்ப்பதற்கு அகப்பையால் துளாவி சில வெந்த அரிசி மணிகளை எடுத்து ஒவ்வொன்றாக நசித்துப் பார்க்கின்றோம். பதமாக நசிந்தால் அரிசி வெந்து சோறாகி விட்டது என்று கொள்கின்றோம். அரிசி நசி படாமல் இறுக்கமாக இருந்தால் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி மூடி இளம் தணலில் புழுங்கவிட்டு விடுகின்றோம். இதைத்தான் நாம் முன்னர் காட்டிய பழமொழி உணர்த்துகிறது. பழம் சோறு நன்றாக இருக்கிறதா? கெட்டு விட்டதா? என்று பார்ப்பதற்கும் இந்த செயல்முறை உபயோகப்படும்.

ஒரு குடும்பத்தை அல்லது தனி மனிதனை அவனது உடை, நடை பாவனைப் பழக்க வழக்கங்களில் இருந்து எடை போட்டு, நல்லவன் கெட்டவன் என்று தீர்மானிப்பதிலும் பேச்சு வழக்கில் ஒப்புவமை காட்டும் பழக்கத்திலும் இந்தப் பழமொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல காய்கறி, கனி வகைகள் நல்லவை, பழுதுபட்டவை அல்லது தேவையில்லாதவை என்று தீர்மானிப்பதற்கும் இந்தப் பழமொழி அடிப்படையில் செயல்படும் பழக்கம் தமிழ் பேசும் மக்களிடம் இருந்து வருகிறது.

குறிப்பாக தென்கிழக்கு மக்களிடம் பேச்சு வழக்கில் இன்றும் இந்த பழமொழி இருந்து வருகிறது. ஒரு பொட்டி மீனில் கையை விட்டு ஒரு மீனை எடுத்துப் பார்த்துவிட்டு "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஒண்ட பொட்டி மீனே பழுதாகி விட்டது. நாறின மீன் எங்களுக்கு வாணாம். எடுத்துக்கிட்டு ஓடு" என்று மீன் வியாபாரியை துரத்தி விடும் அளவுக்கு இந்தப் பழமொழி ஜன ரஞ்சிதமாகி விட்டது குறிப்பிடத்தக்கது.

(இப்படி பழமொழிகள் சமூகத்தின் மத்தியில் எவ்வாறு பயன்படுகிறது? என்ற ஆய்வுகளைச் செய்து ஆக்கங்களை நீங்களும் எழுதியனுப்பலாம். பயனுள்ள ஆக்கங்கள் நிச்சயம் பிரசுரமாகும். - ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுரசும் கலைஞர்களும்

## மணிப்புலவர் மருதூர் - ஏ - மஜீத்

கிண்ணியாவில் இருந்து இடமாற்றம் பெற்றுக் கொண்டு 1962ம் ஆண்டு சம்மாந்துறை வந்து சேர்ந்தேன்.

சம்மாந்துறையை நான் எனது சம்பந்தியூர் என அழைப்ப துண்டு.

இவ்வூரினையும் இவ்வூரில் அமைந்துள்ள மகா வித்தியாலத்தினையும் ஏதோ ஓர் சந்தர்ப்பத்தில்,

"அரைஞாண் கயிறாக
அழகாறு ஓடிவர
நிரைஞாண் கதிர்கள்
நேர் நின்று வாழ்த்தொலிக்க
முறையே நூல் நிலையம்
முடியாகி முறுவலிக்க
வலப்பக்கம் நகர்ப்பள்ளி
இடப்பக்கம் காளி கோயில்
என்று இனத்தவராய்
இன்புற்றுத் தானிருக்க
வண்ணத்து ஆல மரம்
வடி வாகிக் குடையேந்த
வருவோரை வரவேற்கப்
பாடசாலை வழியிலே வந்து நிற்கும்
சம்மாந்துறையூர் - சாந்திநிகேதன்"
எனப்பாடியதுண்டு.

இங்கு எனது இலக்கியப் பயணம் கொஞ்சம் விசாலமடைந்ததை எண்ணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இங்கு கலைஞர்களும், கவிஞர்களும், இலக்கியவாதிகளும் நன்கு போஷிக்கப்பட்டார்கள்.

அதனால் இவர்களது பயணமும் தடையின்றிச் செல்ல ஏதுவாக இருந்தது.

சம்மாந்துறை அழகுமிக்க ஒரு விவசாயக் கிராமம்.

இன்று பட்டணம் என அழைக்கப்பட்டாலும் கிராமத்திற்குரிய அழகு எதுவும் இங்கு அழிந்துவிடவில்லை.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி, பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ. செயின், ஏ. அஸீஸ், கலைத் தொண்டன் அமானுல்லா, பரீதா இஸ்மாயீல் வரலாற்றில் ஓர் ஏடு புகழ் புஹாரி மௌலவி போன்றோரை ஈன்றெடுத்த பெருமையும் இவ்வூருக் குண்டு.

நான் சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் போய்ச் சேர்ந்ததும் எம். ஏ. எம். அமானுல்லா, யூ. எல். அலியார், ஏ. அஸீஸ், பரீதா இஸ்மாயில் போன்றோர் எனது இலக்கிய மாணவர்களானார்கள்.

இந்த நால்வரிலும் அமானுல்லா வித்தியாசமான போக்குடையவர்.

பத்திரிகையொன்று நடத்த வேண்டுமென்று அவாக் கொண்டவர்.

இதற்கு அவருடைய பரம்பரையும் ஒரு காரணம் என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய தந்தையார் "புத்தளத்து ஆலிம்" என அகில இலங்கையிலும் பிரசித்தமானவர்.

அறிவுலகில் தன் மனத்தில் சரியெனப்பட்டதைத் துணிந்து கூறும் தைரியம் மிக்கவர்.

அத்தோடு ஆற்றலும் மிக்கவர்.

"கல்லச்சி" எனப்படும் அச்சடிக்கும் இயந்திர சாதனத்தை கிழக்குப் பிராந்திய முஸ்லிங்கள் கனவுகூடக் கண்டிராத வேளையில் கல்லச்சி இயந்திரம் ஒன்றினை வாங்கி வந்து அதன் மூலம் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு அறிவுப்பசி தீர்த்தவர்.

சொந்தவூர் புத்தளம். திருமணம் செய்த வகையால் சம்மாந்துறையூர் அவருக்குச் சொந்தமானது.

அமானுல்லா அவருடைய மகனல்லவா?

எப்படிச் சும்மா இருப்பார்.

"கரைமுரசு" பத்திரிகையை ஆரம்பிப்போம், ஆரம்பிப்போம்" என என்னை நச்சரித்துக் கொண்டே இருந்தார்.

நச்சரிப்புப் பொறுக்க முடியாமல் ஆரம்பித்தோம்.

கூடவே யூ. எல். அலியாரை யும் சேர்த்துக் கொண்டோம்.

இருவருமே படிப்பவர்கள்.

நான் படிப்பிப்பவன்.

அதற்குள் "கலைமுரசு" வேறு.

பிரசுரத்திற்காக வருகின்ற ஆக்கங்களை திருத்துவது தொடக்கம் அச்சுக் கந்தோருக்குச் சென்று புறுப் பார்ப்பது வரை நானே கஷ்டப்பட்டேன்.

பாவம் அமானுல்லா, கலைமுரசைத் தலையிலே சுமந்துகொண்டு ஊர் ஊராய் அலைவார்.

அவரைத் தவிர வேறு யாருமே இதனைச் செய்ய முடியாது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

தாயும் தகப்பனும் இன்றி பெத்தாவின் அரவணைப்பில் வாழும் அமானுல்லா கலைமுரசு ஆசிரியர், இனிப் படித்த மாதிரித்தான்.

ஊர் ஊராய் அலைபவனுக்கு எப்படிப் படிப்பு வரும் என அவரது சகோதரர் குறைபட்டுக் கொண்டார்.

அவர் கருத்தில் உண்மை இல்லாமலும் இல்லை.

கடைசியில் அமானுல்லா ஊரை விட்டே போய்விட்டார்.

பத்திரிகைக்காகப் பட்ட கடன் மட்டும் ஓடாமல் கல்லுப்போல் சம்மாந்துறையிலேயே நின்றது.

என்ன செய்ய? என் தலைவிதி. கடனைத் தீர்த்து விட்டேன்.

எது எப்படிப் போனாலும் எப்படிக் கடன் பட்டாயினும் கலைமுரசு பத்து இதழ் விரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இது மனத்திற்கு ரம்மியமளிக்கும் செயலாகப்படுகிறது.

இத்தொடரினை எழுதிக் கொண்டிருக்கும் போது (1.2.87ல்) மாருக்கொன , உக்குவலை யில் இருந்து ஒரு பார்சல் வந்திருந்தது.

உடைத்துப் பார்த்தேன்.

"கலைமுரசு" கலைத் தொண்டனின் கலைமுரசுதான்.

அதே அமானுல்லாவின் கலைமுரசுதான். கிட்டத்தட்ட இருபத்தாறு வருடங்களின் பின் மீண்டும் "கலைமுரசு"

என்னால் நம்பவே முடிய வில்லை.

மகிழ்ச்சியொரு பக்கம், அமானுல்லாவைக் காண வேண்டு மென்ற எண்ணத் துடிப்பு ஒருபக்கம்.

பழைய நினைவுகள் மறுபக்கம்.

என் மனம் அசை போட்டது.

"அமானுல்லாவுக்குச் சும்மா இருக்க முடியாது. பிறவிக்குணம்" என முடிவெடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தேன்.

"கலைமுரசில்" மாஸ்டர்-மஜீத் என்ற பெயரிலும், வேறு சில புனைப் பெயரிலும் எழுதினேன்.

கலைமுரசோடு தொடர்புடைய யூ. எல். அலியார் யார் என்று சொல்ல மறந்து விட்டேன்.

இப்பொழுது அலியார் எம். ஏ. பட்டதாரியாகி அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றித் தற்போது சம்மாந்துறை அல்-மர்ஜான் மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் கடமை செய்கிறார்.

ஈழமேகம் பக்கீர்தம்பி அவர்களின் ஏக புதல்வி பௌசியாவின் கணவர்.

பரீதா இஸ்மாயில் கொழும்பு முஸ்லிம் லேடீஸ் கல்லூரியில் உதவி ஆசிரியை.

கலைமுரசு ஆசிரியர் கலைத்தொண்டன் அமானுல்லா குர்ஆன் மதரஸா ஒன்று நடத்துவதாகக் கேள்வி.

இவ்வளவு கஷ்டப்பட்டு கலைக்காகத் தொண்டு செய்யத் துடிக்கும் அமானுல்லாவின் பெயர் கலைஞர்கள் வரிசையிலோ அல்லது எழுத்தாளர்கள் வரிசையிலோ அல்லது பத்திரிகையாளர் வரிசையிலோ, அல்லது ஏதாயினும் ஒரு பட்டியலில் இதுவரையில் நான் காணவே இல்லை.

நாமாவலி தயாரிப்பவர்கள் நன்றி இல்லாதவர்கள். கோஷ்டிகானம் பாடுபவர்கள்.

எழுத்தை நேசிக்கின்ற ஒருவன் இந்த நாமாவலி தயாரிப்பவர்களை நம்பவே கூடாது.

நம்பினால் மனம் வேதனையடையும் என்று கூறி அமானுல்லாவின் பத்திரிகைப் பணி தொடர ஆசிக்கின்றேன்.■■

(நன்றி: மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் கண்டறிய மூன்று விரல்கள் போதும்

டாக்டர். சி. எஸ். மோகனவேலு

### மருத்துவத் துறையில் தமிழன் கண்ட முன்னேற்றம்

தமிழ்நாட்டுக்கு வருகை தந்த ஜெர்மனியர்கள் பலரை மிகவும் கவர்ந்தது நம் சித்த மருத்துவம்தான். ஜெர்மன் பாதிரி சீகன்பால்கு 28.5.1711-ல் எழுதி முடித்த "Malabarsiches Heidenthum" எனும் புத்தகத்தின் ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்கமாகவே கூறுகிறார்:

"மருத்துவக் கல்வியில் இந்தத் தமிழர்கள் பெரும் சாதனை புரிந்துள்ளனர். அவர்களின் இலக்கியங்களில் மருத்துவச் சுவடிகள் மிக உயர்ந்தனவாகும். அவர்களின் சமயப் புத்தகங்களை விட, அவர்களுடைய மருத்துவப் புத்தகங்கள் முழுதும் நன்மை தரத்தக்க - மனித வாழ்க்கை சிறக்க நல்ல பல குறிப்புகளைக் கொண்டுள்ளன.

மனிதனுக்கு வரக்கூடிய எல்லா நோய்களையும் தமிழர்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர். அதாவது வாதம், பித்தம் மற்றும் சேஷ்த்துமம் - என நோய்கள் அனைத்தையும் பிரித்து விடுகின்றனர். மூன்றாவதாக சொல்லப் பட்ட சேஷ்த்துமம் என்பதாவது, உடலின் சில பாகங்களில் - குறிப்பாக, நுரையீரல்களில் சேர்ந்துவிடும் அசுத்தமான நீர்கோவையாகும். மூன்று வகை நாடித்துடிப்புகளைக் கணித்து, எந்த வகை நோய் தாக்குகிறது என முதலில் கண்டுபிடிக்கின்றனர்.

வகுடசாத்திரம் எனும் புத்தகம் (பனையோலைச் சுவடி) இவர்களின் மருத்துவ முறைகளைப் பற்றி மேலும் கூறுவதாவது: இந்த மூன்று வகைகள் எந்த நோய் ஒருவரைத் தாக்குகிறது என்பதை மூன்று விரல்களை மோதிர விரல், நடுவிரல் மற்றும் ஆள்காட்டி விரலை முறைப்படி நோயாளியின் மணிக்கட்டில் வைத்துத் துல்லியமாகக் கணிக்கின்றனர். பெண்களுக்கு இடதுகை மணிக்கட்டிலும் ஆண்களுக்கு வலதுகை மணிக்கட்டிலும் நாடித் துடிப்பைச் சோதனை செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட முறையில் விரல்களை மணிக்கட்டில் வைத்து, மோதிர விரலால் வாத நோய்களையும் சுட்டு விரலால் சேஷ்த்தும நோய்களையும் இவர்கள் கண்டறிகின்றனர். நோயற்ற ஒரு மனிதனுக்கு வாதநாடிகள் தவளை குதிப்பது போலவும், பித்தநாடிகள் ஆண் மயில் குதிப்பது போலவும் மற்றும் சேஷ்த்தும நாடிகள் காட்டுப் புறா தத்திக் குதிப்பது போலவும் துடிக்கும். மாறுபட்ட நாடிகள் துடிப்புகள் நோய்களின் அறிகுறியாகும்.

வாத மற்றும் சேஷ்த்தும நாடிகள் ஒரே மாதிரி துடித்தால் - அதாவது, மோதிர விரல் மற்றும் சுட்டு விரல் ஒரே மாதிரியான நாடித்துடிப்பை உணர்ந்தால், நோயாளிக்கு மூக்கில் நீர் வடியும்... உடம்பு வியர்க்கும்... காய்ச்சலும் வரும்.

ஒவ்வொரு உடம்பிலும் 72,000 ரத்த நாளங்கள் உள்ளன... இவை அனைத்தும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்கும். வாதநாடிகளைப் பிரம்மாவாகவும், பித்தநாடிகளை விஷ்ணுவாகவும், சேஷ்த்துமநாடிகளை சூத்திரனாகவும் வகுடசாத்திரம் எனும் புத்தகத்தில் வர்ணனை செய்துள்ளனர். இந்தப் புத்தகத்தில் நோய்களுக்கான பொதுவான காரணங்களும் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சில:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு மீதமான உணவுப் பொருட்களை சாப்பிடுவது, தேவையான அளவு சரிவர நீர் பருகாமை,மலம் மற்றும் நீர் பந்தம், அகால உணவு முறை, கடினமான உடலுழைப்பு, முழுச் சோம்பல், வழக்கத்துக்கு மாறுப்பட்ட உணவு வகைகள், பயம் மற்றும் மன அதிர்ச்சி, ஒழுக்கமற்ற - நெறிமுறையற்ற வாழ்க்கை, மனக் கவலை, பல்வகை மருத்துவ முறைகள், பெண் வேட்கை, கடுங் கோபம் மற்றும் காழ்ப்பு உணர்ச்சி, தீராத தாகம்...

ஐரோப்பியர்களைப் போலவே, தமிழர்களும் சிறுநீர் பரிசோதனையில் தேர்ச்சிபெற்றுள்ளனர். நோயாளியின் சிறுநீரை ஒரு வகைப் பாத்திரத்தில் தேக்கி அதில் ஒருவகை எண்ணெய்த் துளிகளைச் சொட்டுச் சொட்டாக விடுகின்றனர். எண்ணெய்த் துளிகள் பாத்திரத்தின் அடியில் சென்று தங்கி விட்டால் நோயாளி பிழைக்கவே மாட்டான். பதிலாக, எண்ணெய்த் துளிகள் மிதந்தால் அவனைப் பிழைக்க வைக்க முடியும். மேலும் "டேஞ்சர் லிஸ்ட் பேஷண்ட்டுகள்" சில அறிகுறிகளைக் காட்டுவர், அதாவது நீர்கடுக்கும், நாக்குழறும், கண்விழிகள் நிலைகுலையும், நாக்கு உள்மடிந்து பேச்சுத் தடுமாறும், அண்ணாந்து நிலைகுலைந்த பார்வை, முகம் வெளிறும்.

சுவையான ஒரு கொசுறு விஷயம். 20.2.1726 தேதியிட்ட ப்ரெசியர் மற்றும் வால்த்தர் டைரி, தமிழ் மருத்துவர்கள் 4448 நோய்களையும் அவற்றுக்கான மருந்துவமுறைகளையும் அறிந்திருப்பதாக தகவல் தருகிறது.

தமிழ் மருத்துவர்கள் நோயாளிகளைச் சோதிக்கும் முறையாவது... கண், நாக்கு, மற்றும்தோலின் நிறங்களைப் பரிசோதனை செய்தல். நாடித் துடிப்பைக் கணித்தல், நோயாளியைப் பேசச் செய்தல். மலம் மற்றும் சிறுநீரின் நிறங்களைச் சோதனை செய்தல்.

84 வகை வாதநோய்கள், நாற்பது வகை கர்ப்ப பித்தநோய்கள் மற்றும் இருபது வகை சேஷ்த்தும நோய்கள் மனிதர்களைப் பொதுவாகத் தாக்கும் நோய்களாகக் கூறப்பட்டுள்ளன. இது போன்ற நோய்களைக் கண்டறிந்து, சாதாரணமாக வீட்டுத் தோட்டத்திலேயே வளரும் செடி, கொடி, கிழங்கு, வேர், பட்டை ஆகியவற்றால் நோய்களைக் குணப்படுத்தும் இவர்களது மருத்துவ முறை சாலச் சிறந்தது.

ஐரோப்பாவில் இதுபோன்ற தாவரங்களைக் காணவே முடியாது... "மருத்துவமுறைகளைத் தெரியாத மூடர்கள் தமிழர்கள்" என்று ஐரோப்பியர்கள் எண்ணுவது எவ்வளவு தவறானது என்பதை நான் உணருகிறேன்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் சீகன்பால்கு பாதிரியார்.

ஆகவே, ஐரோப்பியர்களுக்கு குறிப்பாக ஜெர்மானியர்களுக்கு இங்கு வந்த பின்புதான் வெப்ப நோய்கள் மற்றும் வெப்ப மூலிகைகளைப் பற்றி Tropical Herbology தெரியலாயிற்று என்பதும் என்னுடைய ஆய்வினால் கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

நன்றி: ஆனந்த விகடன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரம்சம்

தொப்பி, தலைப்பாகை அணிவது பர்ளுமில்லை; வாஜிபுமில்லை; அவைகளை அணையாதோர் காபிர்களுமில்லை. ஆனால் அவை இஸ்லாத்தின் அழகிய சின்னங்கள்!

"தொழுகையில்லாதவரும், தொப்பியில்லாதவரும் உள்ளே வரக்கூடாது"

—அஞ்ஜுமான் லதீபிய்யா மஸ்ஜிதில் அறிவிப்பு.

"தொப்பியில்லாமல் புகையிரதத்தில் பயணம் செய்தபோது இறந்துவிட்ட முஸ்லிம் வாலிபர் பொது மையவாடியில் காபிர்களுடன் புதைக்கப்பட்டார்."

—பத்திரிகைச் செய்தி.

"பாதையில் தொப்பியடன் வந்த இளைஞர் கூட்டம் மஸ்ஜிதில் தொப்பியைக் கழற்றித்தரையில் வீசி எறிந்து விட்டுத் தொழுதனர்".

—இலங்கையில் சம்பவம்.

இலங்கையில் சுமார் 30ஆண்டுகளுக்கு முன்னர், யாரும் தலைதிறந்து தொழவில்லையே, இப்போது எல்லாமஸ்ஜிதிலும் யாராவது ஓரிருவர் மொட்டத்தலையாகவே தொழுகிறார்களே. என்ன ஸபபு?

—ஒரு பாமரமகன்.

பிரித்தானியப் பேரரசின் நீதி மன்ற உயர் நீதி மன்ற, நீதிபதிகளும், உலகின் பாராளுமன்ற சபாநாயகர்களும், பொலிஸ், கடல்படை, விமானப்படை, காலால் படைத்தளபதிகளும், சிப்பந்திகளும் ஏன் தொப்பியணிந்து தலை மறைத்துத் தோன்றுகின்றார்கள்? என்று பிரிட்டிஷ் அறிஞர்களிடம் ஒரு கேள்வி கேட்டேன்.

"லண்டனில் கிடைத்தபதில் "மூளை தடுமாற்றமின்றி நிதானமாக இருந்து, பொறுமையுடன் செயல்பட தொப்பி துணை புரியும்".

"தொப்பியணைந்து பாடசாலை வரும் முஸ்லிம் மாணவர் தண்டிக்கப்படுவர்".

மேலும் தொப்பியணிவது இஸ்லாமியக் கலாச்சாரப் பாரம்பரியம் என்றால் OK; அது மார்க்கம் என்று கூறினால் தண்டனை தரப்படும்.

—வ. ம. மா. பாடசாலை. ஒன்றில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு மௌலவி எச்சரிக்கை!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும், ஆடைகள், உடுதுணிகள் குறைவான காலத்தில் வாழ்ந்த போதிலும் தொப்பி, தலைப்பாகை இல்லாமலிருந்த சந்தர்பங்கள் மிகக் குறைவானதே.

"தொப்பி தலைப்பாகை மலாஇகா மார்களின் கௌரவச்சின்னம் அவை முஸ்லிமைக்காபிரிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் சாதனம்.

"நபியவர்கள் தொப்பியணிந்தார்கள்" ஹதீஸ் திர்மிதி, அஹ்மத "நபி (ஸல்) சில சந்தர்பங்களில் தொப்பியின் மீதும் வேறு சில சந்தர்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொப்பியில்லாமலும் தலைப்பாகை அணிந்திருந்தார்கள்."

ஜாதுல் மஆதின் பதிவு.

நபி (ஸல்) வெண்மையான தொப்பியும் அணிந்திருந்தார்கள்.

—தப்றானி, துஹ்பா

நபித்தோழர் வீரர் காலித் பின் வலீத் தொப்பியணிந்திருந்தார் என்பதை ஜானி ரிவாயத் செய்ய, "நபித்தொழர்களின் தொப்பிகள் வட்டமடிவமாக இருந்தன" என்று திர்மிதி பதிவு செய்துள்ளது.

# சுத்தமும், சுகமும்தரும் தொப்பியும், தலைப்பாகையும்.

—அல்-ஹாஜ். மௌலவி H. ஸலாஜுத்தீன் (பாரி) J.P. ஹனபி மஸ்ஜித் - கண்டி

[மதிப்புக்குறிய பெரியார் அவர்களின் இலவச பிரசுரத்தின் தொகுப்பு மறு பிரசுரமாக இடம் பெருகிறது. ஆசிரியர்]

1998 ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் மதுரை பைதுல் மால் நிறவனத்தின் 16வது ஏழைக்குமர் சிக்கன நிகாஹு வைபவத்தில் 26 குமர்களுக்கு நிகாஹு நடைபெற்றது. அத்தோடு அவர்கள் 501 குமர் காரியங்களை சிறப்பாக நடாத்தி முடித்தனர்.

இப்புண்ணிய காரியம் 1983 முதல் நடை பெற்று வருகின்றது. இச்சிறப்பான நிகழ்வு முடிந்து மதுரையின் பிரபலமான இரண்டு உலமாக்கள் என்கூடவே வந்தனர். திருச்சிவரும் வழியில் திண்டுக்கலில் காரை நிறுத்தி விட்டு. ஒரு மஸ்ஜிதுக்குள் நுழைந்தோம்.

"தொழுகையில்லாதவரும், தொப்பியில்லாதவரும் உள்ளே வரக்கூடாது" என்று கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்ததைக்கண்டு "இது என்ன இப்படி ஒரு அறிவிப்பு?" என்றேன். "அவர்களுக்கு இங்கு என்ன வேலை?" என்று பதில் கிடைத்தது. தண்ணீர் "பைப்"களின் பக்கம் கவனம் செலுத்தினேன். "மஸ்ஜிதின் தண்ணீர் வுளூவுக்காகவே உள்ளது. தண்ணீரைத் தொட்டால் இரண்டு "ரகஅத்" தொழ வேண்டும்." என்றொரு ஆணை. இந்த அறிவிப்பை படித்ததம், நமது திரு இலங்கைத்தீவில் தொழுகையே இல்லாத ஆயிரக்கணக்கானோர் காலமெல்லாம் "வக்பு"த்தண்ணீரை வீண்விரயம் செய்வது என்மனக்கண்ணில் இழையோடியது.

தொப்பி பல வகைப்படும். வட்டத்தொப்பி, நீட்டத்தொப்பி, கட்டத்தொப்பி, நெடிய தொப்பி, துருக்கித்தொப்பி, அரபுத் தொப்பி, ஜின்னாத் தொப்பி, ஜரிகைத் தொப்பி. ஆப்பிள் தொப்பி, குஞ்சன் தொப்பி, பிரம்புத்தொப்பி, ஓலைத்தொப்பி, துணித்தொப்பி இப்படி எத்தனையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யஹூதி, நஸாராக்களும், சீக்கியர், வடநாட்டு ஹிந்துக்களும் தொப்பி பாவிக்கின்றனர். அவை நம்மிலும் சிறிது வேறுபட்டது. உதாரணமாக யூதர்களின் தொப்பி உச்சியிலிருந்து 2 1/2 அங்குலம் மட்டுமே.

எந்தவொரு நபியோ, ரசூலோ, அவ்லியாவோ, மேதையோ மொட்டைத் தலைக் கலாச்சாரத்தை உலகில் அறிமுகம் செய்யவில்லை.

இஸ்லாமிய உலகில் அவ்வப்போது தோன்றிய தேசத் தலைவர்கள், உண்மையான இஸ்லா மிய நாடுகளை ஆண்டவர்கள் யாவரின் உருவங்களையும் கற்பனை செய்து பாருங்கள். தொப்பியில்லாத தோற்றத்தில் நடமாடியது ஓரிருவர் மட்டுமே.

நமது திரு இலங்கையிலே தொப்பி நீதிமன்றத்திலும் சாதனை புரிந்த வரலாறுண்டு. நினைத்துப் பாருங்கள். மர்ஹூம்களான T.B. ஜாயா, சித்திலெப்பை, அப்துல்காதர், வாப்பிச்சி, உம்பிச்சி, சேர் ராஸிக் பரீத், டாக்டர் கலீல், டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத், N.D.H., மாகான் மாக்கார், இப்படியே எழுதிக் கொண்டு போகலாம். இவர்கள் யாவரும் தொப்பிக் கலாச்சாரத்துக்கு உயிரோட்டம் கொடுத்தவர்கள்.

இனக்கலவரத்தின் போது வேற்று மதத்தவர் முஸ்லிம்களின் சின்னமான தொப்பியை இரவல் வாங்கி அணிந்து கொண்ட செய்திகளும் உண்டு.

"தொப்பியே முஸ்லிம்களின் சின்னமாகும், இஸ்லாத்தின் அடையாளமாகும். தொப்பியில்லாதவர் முஸ்லிம்களில்லை" என்ற முடிவுக்கு வேற்று மதத்தவர் வந்த ஒரு வரலாறு 1940 களின் கடைசியில் நடந்த ஒரு நிகழ்வு பற்றி அக்கால நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டதை 50 வயது பிந்தியவர்கள் மறந்திருக்க முடியாது. கொழும்பிலிருந்து பேருவளைக்குப் பயணமாகிய ஒரு பயணி, மாத்தறையில் புகையிரத இலாகா ஊழியர்களால் பிணமாகக் கண்டு பிடிக்கப்பட்டார். விசாரணைகளின் போது கொழும்பு-பேருவளை பயண டிக்கட்டைத் தவிர அவரை முஸ்லிம் என இனங்காண எந்த விதமான சான்றுகளுமில்லை. "மூன்று நாட்களின் பின் அவர் பொது மையவாடியில் புதைக்கப்பட்டார்" என்ற பத்திரிகைச் செய்தி படித்து, குடும்பத்தவர் சென்று, புதை குழியைத் தோண்டி பூத உடலை எடுத்து, ஜனாஸாவை நல்லடக்கம் செய்ய முயன்ற போது, "அவர் முஸ்லிம் என்பதற்கு தொப்பியோ, வேறு அடையாளமோ இருக்கவில்லை" என்று அனுமதி மறுக்கப்பட்ட செய்தியையும்

இவ்வாண்டு மே, ஜுன் மாதங்களில் லண்டன் வீதிகளில் நடமாடும்போது பொதுமலசலக் கூடங் (Toilets)களில், "ஹெல்மட்" அணிந்து உள்ளே செல்" என்று எழுதப்பட்டிருந்தது. ஏன் என்றேன். (For health Reasons) சுகாதார காரணங்க ளுக்காக என்றார்கள். அப்படி என்ன காரணங்கள் இருக்க முடியும்? என்ற நீண்ட ஆராய்ச்சிகளை மேற்கொண் டேன். காரணம் தலையை மூடி (தொப்பி கைக்குட்டை, துண்டு, துணியுடன்) மலசலம் கழிப்பது இஸ்லாத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி! முழங்கால் மூடி, பாதணிகளுடன் செல்லுமாறு லண்ட னில் எழுதப்பட்டிருக்க வில்லை. காரணம் இங்கிலாந்தில் பாதணிக ளின்றி யாரும் நடமாடுவ தில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவாகளின் ஸுன்னத் வழி முறை களை எல்லாம் இந்த வெள்ளையர்கள் தான் நன்றாக விளங்கி உயிரோட்டம் கொடுக்கப் போகிறார்களா? நமது முஸ்லிம்களில் பெரும்பாலோர் தலை திறந்தவர்க ளாகத்தானே மல, சலம் கழிக் கின்றனர்" என்ற ஏக்கத்துடனும், கவலையுடனும் இருக்கையில் 10.8.98 வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி இந்தியன் ராஜ் T.V.யில் ஒரு டாக்டர் தோற்றம் வழங்குகிறார்.

தொப்பி பற்றி ஒரு சிறிய விளக்கம் இடம் பெறுகிறது "தொப்பியணிந்து மலகூடம் செல்வ தேன்?"

வினாவுக்கு விடை தெளிவாக அமைந்தது. அழகான, ஆணித்தரமான மருத்துவ விளக்கம்.

மலவாயில் விரியும்பொது உடம்பின் கீழ் பகுதியுடன் தொடர்பு படுத்தப்பட்டு, தலையில், மூளையுடன் தொடர்புள்ள ஒரு மெல்லிய நரம்புத் தொகுதியும் சேர்ந்து விரிகின்றன. அப்போது தலை திறந்திருப்பின், நுண்ணிய கிருமிகள் மலத்தோடு வெளிவருவன, தலையினூடே மீண்டும் உடலுக்குள் நுழைய வாய்ப்புண்டு. தொப்பியணிந்து தலை மூடப்பட்டிருப்பதால் அது சாத்திய மில்லை." என்ற அறிவார்ந்த கருத்தைக் கேட்ட நிமிடமே இந்நூல் எழுதப்படுவதன் அவசியம் உணரப் பட்டது.

உடனே காரியத்தில் இறங்கினேன். இனி இக்கருத்துக்களை உய்களுக்கு வேண்டியோருக்கு எத்தி வைக்கும் பாரிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது.

அல்லாஹ் கற்றுக் கொடுத்தா லொழிய நமக்கு அறிவில்லை. அவனே அறிந்தவனும் ஞானம் மிக்கவனும்.

உலகில் எந்த மதத்தவர், சாதியினர், இனத்தவர் தொப்பி தலைப்பாகை அணிந்த போதிலும் தொப்பி தலைப்பாகை இரண்டுமே முஸ்லிம்களுக்குரியவை. அவை இஸ்லாத்தின் அடையாளங்கள்.

அதே தினசரி வெளியிட்டது. இச்செய்தியை எனக்குப் படிக்கச் செய்தது எனது நல்லாசான் கல் எலிய மர்ஹூம் A.L.M.யூசுப் ஆலிம் அவர்கள். அது அப்படியிருக்க, "தொப்பி அணிவது இஸ்லாமில்லை" என்று கூறுவோரைப் பற்றியும், தலையில் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றி கீழே தூக்கி எறிந்து விட்டுத் தொழுவோரைப் பற்றியும் என்ன கூற வேண்டியுள்ளது?

அவர்களை அணுகி மெதுவாக, "இது என்ன தம்பி, இது யார் சொல்லித் தந்த பாடம்?" என்று கேட்டதற்கு, "சவ்தியில் இருந்து வந்த பிள்ளைகள்" என்று நிதானமாகப் பதில் வந்தது.

"அப்படியானால் மக்கா, மதீனாவும் அங்கு தானே இருக் கின்றன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சிக்குத் தொழுகை நடத்துவோம்!

■ உலகத்தினிலேயே
உயர்ந்த ஜனநாயகம்
இந்திய ஜனநாயகம்தான்!
தமக்குத் தானே
அடிக்கடி வோட்டுப் போடும்
அதிர்ஷ்டம் கிடைக்கிறது.

■ கோவணத்தோடு
குந்தியிருக்கிறான்
இந்தியன்!
அவனுடைய
மானத்தைக் காப்பதற்காக
அவசர அவசரமாய்
வாக்குச் சீட்டுகள்
அச்சாகிக் கொண்டுள்ளன.

■ வயல்வெளிகள்
காய்கிறது.
வெள்ளம்
மதுக்கடைகளில்
பாய்கிறது!

■ இந்தியாவில்
வேலையைத் தேடி
விழி பிதுங்கும்
ஆண்கள்...
தாலியைத் தேடி
தவித்தழும் பெண்கள்....
கடவுள் அவர்களுக்காகக்
கண்திறக்க வேண்டாமா?
அதனால்தான்
கோயில்களைக் காக்க
குழுக்கள் அமைக்கின்றோம்!

■ பெருமாள் கோயிலின் முன்
ஏராளமான
பிச்சைக்காரர்கள்...
மசூதிகளின் முன்பு
முண்டியடித்தபடி
முஸாபர்கள்...!

■ அநீதிகளை விசாரிக்க
அடிக்கடி இங்கே
கமிஷன் போடுவோம்!
ஓய்வு பெற்று
வீட்டிலிருக்கும் நீதிபதிகளுக்கு
வேலைவாய்ப்பு வேண்டாமா?

■ தனி மனிதன் கடத்தினால்
அது
தங்கக்கடத்தல்!
தேசமே கடத்தினால்...!
தேசமே கடத்தினால்
அது
பொருளாதாரச் சீர்திருத்தம்!

■ இந்திய நாட்டின்
தலைவாகளெல்லாம்
கடிகாரம் மாதிரி!
இருக்கும்
இடங்களுக்கு
ஏற்றமாதிரி
நேரம் காட்டுகிறார்கள்.
தவறாக
நேரம் காட்டினாலும்
பத்திரமாகப்
பாதுகாக்கப்படுகிறார்கள்.!

■ தொண்டர்கள்தான்
காலண்டர் மாதிரி...
இருக்கும் இடம்
எதுவானாலும்
நீதிமாறாது
தேதி காட்டுகிறார்கள்!
சரியான
தேதி காட்டுவதால்
கிழக்கு வெளுக்கும்போதே
கிழிக்கபபடுகிறார்கள...!
தொலைக்காட்சியை நோக்கித்
தொழுகை நடத்துவோம்!
அதுதான்
தன்னை உணர்ந்து
தடங்கலுக்கு வருந்துகின்றது!
எந்த நாட்டிலாவது
எந்தத் தலைவனாவது
தேசத்தின் வளர்ச்சிக்குத்
தன்னால் நேர்ந்த
தடங்கலுக்கு
வருந்தியிருக்கின்றானா?
தொலைக்காட்சியை நோக்கித்
தொழுகை நடத்துவோம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் காற்று

மூச்சுவிட மறந்துவிட்டேன்
என் வீட்டில்
உன்னைப்பற்றிப்
பேச்சு வந்தால்!

## சூர்ப்பனகை

ஒரு
முத்தத்தை வரவழைக்க
முடியாமல் போனதனால்
யுத்தத்தை வரவழைத்தவள்!

## வாழ்க்கை

பெட்டி படுக்கைகளைச்
சுமந்தபடி
ஒரு
பிரயாணம்!
எப்போது சுமைகளை
இறக்கி வைக்கிறோமோ
அப்போது
சுற்றியிருப்பவர்கள்
நம்மைச் சுமக்கத்
தொடங்குகிறார்கள்.........



கவிஞர் மு. மேத்தா
நன்றி - ஆனந்த விகடன்

## தாய்

- மடவளை கலீல் -

பெற்றாய்!
வளர்த்தாய்!
குழந்தாய்
என்றழைத்தாய்!

குளிர்ந்தாய்!
மலர்ந்தாய்!
அரவணைத்தாய்!
அன்பே என்றழைத்தாய்!

பொறுத்தாய்!
சிரித்தாய்!
பூரித்தாய்!
நீயே என் அன்புத்தாய்!

## வறுமைக்கு விடுதலை என்று விடியும்?

வறுமைக் கோட்டின் கீழே
வாழும் ஏழையர் நாங்கள்
பொறுமை எல்லை மீறி
புயலைக்காண்போர் நாங்கள்!

நதிவெள்ளம் வழி மாறும்
வழிப்பாதை வளமாகும் - எம்
விதிவெள்ளம் தொடர்ந்தேகும்!
வேதனைகள் பெருகி வரும்!

கதிரவனோ டெழுகின்றோம்
கஞ்சிக்காய் உழைக்கின்றோம்!
உதிரம் பாய்ந்து வியர்வைத் துளியாய்
ஓடும்! நாமோ ஓடாய்ப்
போனோம்!

படித்திடவா வழியில்லை
பாதைகள் மாறிவிட்டோம்!
விடிவொன்று கிடைக்கவில்லை
விடுதலையோ எமக்கில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை

செங்கதிரோன் கிழக்குதிக்கச் சேவலோடு
செந்தமிழ்க் குயிலோடு காகம் பாட
மங்கையரும் வளம் பெறுக நாடு என்று
செங்களனி உரமாக வியர்வை உண்ண
மங்காது களைபோக்க வேலை நேரம்
தங்கின்றி நாபொழியம் நாட்டுப்பாடல்
செங்கதிர்கள் இன்புற்று தேறிநிற்க
கரம்கூப்பி வந்திடுவார் லஷ் சுமியும்.

நிழல் நீளம் அடியளந்து நேரம் சொல்லும்
நிபுணர்கள் பூவாளும் கட்டுச் சோறும்
களம் நோக்க காளைக்கும் ஏழெட்டுக்
கட்டைகள் கதிர்மணிகள் ஒன்றுசேரும்
பழம் பெருமை போக்காது அவுலியாக்கள்
பங்களித்து மாநபியின் வேதமோதும்
வளமிலார் இல்லத்தை யேகும் பாங்கு
ஏகிடுவான் ஊர்விட்டு பஞ்சப்பேயன்.

கிழக்கிலுள்ள களனிகளைக் கடக்க வந்த
மோதிடுவான் யாழ்நூலைத் தந்த மன்னன்
பழங்காலப் புகழ்பாடும் கப்பற்பாதை
கடக்கவரும் நற்பிட்டி முனைவடக்கில்
வழங்குவதில் பேதமில்லாக் களனிச்சோலை
கண்டெட்டாத்தூரமெல்லாம் தெற்கோ பாடும்
வளத்தாப்பிட்டியோ மேற்கில் மோத
வளமிக்க ஊரேதான் எங்களூரே.

ஆங்கிலேய ஆதிக்கப் பேயை ஓட்டும்
வீரர்கள் பட்டியலில் அவர்கள் ஈகா
தூங்காது கலையோடு விஞ்ஞானமும்
தொங்கிய பட்டங்கள் நூறின்மேலே
தீங்குசெய நினையாத உயர்திணையை
திக்கெல்லாம் சீவியம் தள்ளவைத்து
பாங்கோசை பல்திசையும் மோதமோத
புன்னகைப்பாள் தாயெந்தன் சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவின் மேடையிலே தமிழைத்தூவி
அழகுதமிழ் ஒன்றிணைந்த ஈழமேகம்
பன்நாட்டு புகழ்பெற்ற மெய்வல்லாளன்
செம்பியன் சரீபுக்கும் தாய்மையாகி
மனுவேதம் மனனம்செய் அரபிச்சாலை
தொழில் நுட்பக்கல்லூரி அ∴தினோடு
பண்பற்றுப் போகாது கவிதையோதும்
பாவலணார் பட்டியலும் நீண்டேபோகும்.

அன்னமும் பாலோடு முக்கனியும்,
அழியாத செல்வங்கள் எங்களூரின்
பண்ணிசைப்பர் பாவலர், மாறன், மன்சூர்,
பரீதாவும், ஆனந்தன், அஸீஸினோடு
கல்லோயாக் காவியம் தந்த சரீப்
பரிசாரி ஈழக்குயில், யூசுப்போடு
பண்ணுக்கே அடங்காத பட்டியலாய்ப்
பலநூறு பெயர்கூறும் களனிச்சோலை.

கலைமாணி முதல்மகனே பீர மஜீத்
கீழ் நிலைக்கு வீழாது காலந்தோறும்
பழக்கமுடை பல்கதிரை பேரவையில்
பெற்றுபுகழ் துறையூரின் காவலனோ
இணக்கமுடன் பாமரர்கள் அனன்புடனே
பழகுநல் இனிமையுடட் அப்துல்மஜீத்
தனதன்னை புகழ்பாடும் சம்மாந்துறை
தாயென்று பெயர்கூறத் தயங்குவேனோ.

கண்டீரே முதல்வனவன் டிஎஸ்சிந்தை
கல்லோயாக் குளங்கண்டு குடிகள்வாழும்
நண்டுரும் நட்டுமை கூடவந்த
தழுவாது அணைக்கட்டைக் கட்டுவித்த
எஞ்சினியர் குலத்திடையே தலைவனாக
விளங்கிய இஸ்மாயில் துரையுமெங்கள்
நஞ்சைநிலம் சூழ்கொண்ட சம்மாந்துறைத்
தாய்தந்த மகனேதான் உணருவீரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமுடன் வளர்வதற்கு சட்டம்நன்றே
ஓம்புதலும் உணர்ந்ததினால் சட்டத்துறையின்
விளக்கத்தை பெறுவதற்கு சம்மாந்துறை
யூஎல்எம் முகையதீன் அப்துல் ஜப்பார்
புனிதமுடன் நீதியும் வாழச்செய்யும்
நிலையினிலும் குறைவில்லை அப்துல் கபூர்
மனிதரிடை குறைநிறைகள் கண்டுதீர்ப்பு
வழங்குமகன் துறையூரின் மகனேபாரீர்.

சீர்பாத தேவியவள் ஓடிவந்த
கலம்மோதக் கரைகண்ட சிந்தாத்துரை
ஊர்புகழ் பிள்ளையார் கோயிலுடன்
ஊர்நடுவே உருப்பெற்ற காளிகோயில்
மார்தட்டி எழுந்திருக்கும் காட்சியெங்கள்
ஊருக்குப் பேருமைதரும் பாரீர்வந்த
கூர்மையுடன் நோக்கிவிடின் மக்களன்பு
ஒட்டியநல் சம்பாந்துறை காண்பாய்தானே.

வடக்கோடு கிழக்காகி மீன்கள் பாட
வங்காள விரிகுடா சங்கமிக்கும்
பட்டிப்பளை பல்லாறு கல்லிரைச்சல்
பல்நாமல் சூடிய நீர் வளத்தால்
திட்டியும், திடலுமாய்ப் புல்லினங்கள்
உயில் காட்டா விவசாயச் சோலையாக்கி
திடமோடு புகழ்பாடும் சம்மாந்துறை
தாயென்ற பெயர் சொல்லத் தயங்குவேனோ?

மீன்பாடு தேனாட்டில் அச்சை ஏற்று
பிறந்த முதல் "கலைமுரசு" என்னுமந்த
தீந்தமிழ் சஞ்சிகை தந்த மன்னன்
எம். ஏ. எம். அமானுல்லா (உற்) மௌலவியும்
வீங்கவே "புதுப்பாதை" உரைமலரும்
இன்னோரன்ன ஏடுகளும் எமக்களித்து
வாங்காது எவற்றிலும் பழிச்சொற்கள்
வளங்கொண்ட ஊரேதான் எங்களுரே.

16. 01. 1981

- ஈழக்குயில் இத்ரீஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம் புனித ஹறம்களின் இமாம்கள், மக்கா மதீனாவில் தொழுகை நடாத்த வந்து நின்று, தொப்பி தலைப்பாகைகளைக் கழற்றி எறிந்ததை நான் ஒரு காலத்திலும் பார்த்ததில்லையே.!"

மொட்டைத் தலை இமாம்கள் ஒருபோதும் மக்கா மதீனாவில் மஸ்ஜித் ஹறாம், மஸ்ஜித் நபவிகளில் நான் காணவே இல்லையே" என்றேன். தவிர வேலைக்குப் போன பொடியன் மாருக்குத் தெரியாமல் இருக்கலாம். சவ்தியின் தேசிய உடையில் (National Dress) தொப்பி, தலைப்பாகை, வளையல், ஜிப்பா இவைதான் இடம் பெறுகின்றன.

சிறு பிள்ளைகள் விட்ட பாடில்லை. "தொப்பி தலைப்பாகைக்கு என்ன தலீல்?" சவ்திக்காரரிடம் கேட்க வேண்டியது.

சரி, தம்பி, தலீல் (ஆதாரம்) கிதாபுகளைக் காண்பித்தால் படிக்க முடியுமா?

"தமிழில் இருந்தால் படிக்கலாம்" ஓகோ! அப்படியா! தமிழ் தலீல்கள் கிடைத்தால் தருகிறேன். பார்ப்போம்.

ஏன் தொப்பி கழற்ற படித்தவர்கள் கொஞ்சம் அரபும் படித்து வரக் கூடாதா? குர்ஆனின் குரலுக்கு நன்றி. சங்கைக்குரிய மௌலானா மௌலவி ஹாபிஸ் சைபுத்தீன் ரசாதி ஹஸ்ரத் அவர்களிடம் இப்படி ஒரு வினா.

கேள்வி: இஸ்லாத்தில் தொப்பி தலைப்பாகைக்குரிய அந்தஸ்து என்ன? இவைகளுக்கும் மார்க்கத் திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என எழுதியும் பேசியும் வருபவர்க ளுக்கு என்ன பதில் கூறுகின்றீர்கள்? விளக்கமாக எழுதுங்கள்.

பதில்: தொப்பி தலைப் பாகைக்கும், மார்க்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் கூறுவது இஸ்லாமிய மார்க்கத்தை அல்ல. அவர்கள் சார்ந்துள்ள (?) யூத, கிறீஸ்தவ மார்க்கத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே நாம் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. இருப்பினும் பொதுமக்களுக்கு மத்தியில் ஆதாரங்கள் என்ற பெயரால் சில உளறல்களை அவர்கள் கூறுவதால், சில விபரம் அறியாத மக்களுக்கு குழப்பம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே இதைப்பற்றி சற்று விரிவாக ஆய்வு செய்வோம்.
ஆடை அணிதல்: ஆடைஅணிவது மனித குலத்திற்குரிய சிறப்பம்சமாகும். கண்களுக்குப் புலப்படும் மற்ற உயிரினங்களுக்கு ஆடைகள் அணியும் பழக்கமும் இல்லை. அணிய வேண்டுமென்ற சட்டமும் இல்லை. இதனால்தான் மனித குலத்திற்கு தாம் வழங்கியுள்ள அருட்கொடைகளில் ஒன்றாக ஆடைகளை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். "ஆதமின் சந்ததிகளே! உங்களுக்கு தமது மறைவிடங்களை மறைப்பதற்குரிய (அவசிய) ஆடைகளையும், மேலும் அழகுமிகு (கௌரவ) ஆடைகளையும் நாம் (அருட்கொடையாக) வழங்கியுள்ளோம்." -அல்குர்ஆன் 8:26

**இரண்டு வகை ஆடைகள்:** ஆடைகள் இரண்டு வகையானது. ஒன்று அபத்தை மறைக்கும் அளவிற்குரிய அவசிய ஆடை. மற்றொன்று அழகைத் தரும் கௌரவ ஆடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவசிய ஆடை:** இஸ்லாமிய மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் எந்தளவு உடலை மறைக்க வேண்டியது கட்டாயம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ, அதற்கு அவசிய ஆடை என்று கூறப்படும். (ஆண்களைப் பொறுத்தவரை) தொப்புளிலிருந்து முழங்கால் வரையுள்ள பகுதிகள் மறைக்கப் பட்டாக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவர்:** ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) நூல்கள்: அஹ்மத், தாரகுத்னி

இந்த ஹதீஸில் இருந்து ஆண்கள் மேற்கூறப்பட்டுள்ள அளவை விட குறைவான ஆடைகளை அணிந்து தொழுதால், அந்தத் தொழுகை கூடாது என்பதோடு, இவ்வாறு அணிந்து பிறர் முன்னால் காட்சியளிப்பது குற்றமாகும் என்பதனையும் விளங்க முடிகின்றது.

**அலங்கார ஆடை:** மேலே குறிப்பிட்ட ஆடைகளைக் காட்டிலும் மற்ற பகுதிகளை மறைக்க அணியப்படும் ஆடைகளை அலங்கார ஆடை என்றோ, அழகு தரும் ஆடை என்றோ குறிப்பிடலாம். இதிலிருந்து சட்டரீதியாக பார்த்தால் உடலில் ஒரு பகுதியை (தொப்புளிலிருந்து முழங்கால் வரை) மறைப்பது கடமை. மற்ற பகுதியை மறைப்பது கடமையோ கட்டாயமோ இல்லை என்பதை விளங்கலாம். இதன்படி சுருங்கச் சொன்னால் சாரம், கைலி, கால்சட்டை போன்ற ஆடைகள் கட்டாயமானது என்றும், சட்டை, ஜிப்பா, தொப்பி, தலைப்பாகை போன்ற ஆடைகள் அழகைத் தரும் உடைகளாகும் என்று ம் விளங்க முடிகிறது. முதல் வகை ஆடைகளைக் கட்டாய ஆடைகள் என்றும், இரண்டாவது வகை ஆடைகளை உபரி ஆடைகள் என்றும் குறிப்பிடலாம்.

**தொழுகைக்குரிய ஆடை:** தொழக்கூடியவன் இவ்விரு வகை ஆடைகளில் முதல் வகையான கட்டாய ஆடையை அணிந்து கொண்டு தொழுதாலும், தொழுகை கூடும் என்று இருந்தாலும், அல்லாஹ் அழகைத் தரும் உபரி ஆடைகளை அணிந்து தொழுவதையே விரும்புகின்றான் என்பதை கீழ்காணும் திருவசனம் சுட்டிக் காட்டுகின்றது. "ஆதமின் சந்ததிகளே! தொழும் நேரத்தில் அழகிய ஆடையை அணியச் செய்யுங்கள்". -அல்குர்ஆன். 8:31

**சட்டையும் கழட்டுக!:** இந்த இறைவசனத்தின்படி தொழக்கூடிய நேரத்தில் கட்டாய ஆடையை அணிவதோடு நிற்காமல் அதைவிட அதிகமான உபரியான ஜிப்பா, சட்டை, தொப்பி, தலைப்பாகை போன்ற உபரி ஆடைகளை அணிவதை இஸ்லாமிய மார்க்கம் விரும்புகிறது என்பதை நன்குணர முடியும்.

தொப்பி தலைப்பாகைக்கென எவ்வித மகத்துவமும் இல்லை என்றும், இதற்கும் மார்க்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், தொழுகைக்கு தலையை மறைக்க வேண்டியது இல்லை என்றெல்லாம் கூறி தொப்பி தலைப்பாகையைக் கழட்டச் சொல்லும் இந்த புண்ணிய வான்கள் இன்னொரு உபரியான ஆடையாகிய சட்டையையும் கழட்ட ஏன் கூறுவது இல்லை? வெறும் வேட்டியணிந்து திறந்த மேனியோடு ஏன் இவர்கள் பள்ளிவாசல், மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் காட்சி தருவது இல்லை.?

தொப்பி தலைப்பாகைக்கு எந்த அந்தஸ்தோ சட்டைக்கும் அதே அந்தஸ்துதானே.! இரண்டுமே கட்டாயம் இல்லாத உபரி என்ற நிலையைத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது. தலையை மறைப்பதை கட்டாயத்தைப் போன்று செயல்படுத்துகின்றார்கள். அவ்வாறு இல்லை என்பதை உணர்த்துவதற்கே திறந்த தலை நிலையை வரவேற்கின்றோம் என்று கூறும் இவர்கள், சட்டையுடைய விடயத்தில் மட்டும் திசை மாறிப் போவது ஏனோ? திறந்த தலைக் கூட்டத்தை உருவாக்கிய இவர்கள் திறந்த மேனிக் கூட்டத்தை எப்போது உருவாக்கப் போகிறார்கள்?

ஒரு சமயம் இனிமேல் செய்யும் உத்தேசமாக இருக்குமோ என்னவோ?

தொப்பி தலைப்பாகை நபி வழி இல்லையா?: ஒரு வழியை நபி வழியா இல்லையா என்பதைக் கூறக்கூடிய தகுதி யாருக்கு இருக்கின்றது? நபியவர்களுடன் வாழ்ந்து அவர்களின் வாழ்வை தமது வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்த நபி தோழர்கள் மூலமாகத்தானே நபிவழி இன்னதென்று புரிய முடியும்.

நச்சுக்கருத்துக்களைப் பரப்பி வரும் இந்த நாசக்காரர்களின் மூலம் நபி வழியை விளங்குவதைக் காட்டிலும் நபி தோழர் மூலம் விளங்குவதுதானே அறிவுடையோர் கடைப்பிடிக்கும் செயலாகும். வாருங்கள் நபி தோழர்கள் என்ன கூறுகின்றார்கள் என்று பார்க்கலாம்.

ஒரு நபர் ஹள்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் தலைப்பாகை அணிவது நபி வழியா? என்று கேட்டதற்கு "ஆம்" என்று பதிலளித்துள்ளார்கள்.

நூல்: ஐனி - பாகம் 10 பக்கம் 232

நபியவர்களின் வாழ்வை நேரடியாக பார்த்த நபி தோழர் "தலைப்பாகை அணிவதை சுன்னத்" என்று பிரகடனப் படுத்துகின்றார்கள். இந்த முட்டாள்கள் தலைப்பாகைக்கும் இஸ்லாத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று உளறுகின்றார்கள். யார் சொல்லை ஏற்பது? என நீங்கள் முடிவு செய்யுங்கள்.

நபி தோழர் ஒரு செயலை நபிவழி (சுன்னத்) என்று குறிப்பி டுகின்றார்கள் என்றால், அந்த செயலை நபி அவர்களிடமிருந்து ஏனோ தானோ என்றோ, தற்செயலா கவோ நிகழ்ந்த செயலாக இருக்க முடியாது. மாறாக நபியவர்களால் விரும்பப்பட்டும் மற்றவர்களும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும் விதத்தில் செய்து காட்டப்பட்ட செயல் ஆகும்.

நபியவர்கள் பல்வேறு நிலைகளிலும் தொப்பி தலைப்பாகை அணிந்து இருந்ததோடு மற்றவர்க ளையும் அணியத் தூண்டிய, கட்டளை யிட்ட ஹதீஸ்கள் பல இருக்கின்றன. எனவே தான் ஹள்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் இரத்தினச் சுருக்கமாக "தலைப்பாகை அணிவது சுன்னத் ஆகும்" என்று தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

**ஜும்ஆ தொழுகையில் தலைப்பாகை:** நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆவுடைய தினத்தில் கறுப்பு நிற தலைப்பாகை அணிந்த நிலையில் குத்பா பிரசங்கம் செய்தார்கள். அறிவிப்பாளர்: ஹள்ரத் அம்ரு இப்னு ஹுரைஸ் (ரலி). நூல்-முஸ்லிம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஹதீஸினால் ஜும்ஆ உடைய தொழுகைக்கு தலைப்பாகை அணிவது நபி வழியாகும் என்பது விளங்குகிறது.

**வெற்றியின் தினத்திலும் தலைப்பாகை:** மக்கா வெற்றி கொள்ளப்பட்ட தினத்தன்று கறுப்பு நிற தலைப்பாகை அணிந்தவர்களாக நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் பிரவேசித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஜாபிர் (ரலி) நூல்: முஸ்லிம்

இதிலிருந்து வெற்றி போன்ற சந்தோஷமான நிலைகளிலும் தலைப்பாகை அணிவது நபி வழி என்பது விளங்குகிறது.

**எல்லா தொழுகைகளிலும் தலைப்பாகை:** ஐவேளைத் தொழுகையில் மூன்று முழத்தலைப்பாகையாகவும், ஜும்ஆ, ஈத், பெருநாள்களில் ஏழு முழத்தலைப்பாகையாகவும் நபி (ஸல்) அதிகமான சந்தர்ப்பங்களில் அணிந்து வந்தார்கள்.

அன்வர் ஷாஹ் கஷ்மீரி (ரஹ்)
நூல்:அல் அர்ஃபுஷ்ஷதி ஷரஹ் திர்மீதி

இதிலிருந்து எல்லா தொழுகைகளிலும் நபி (ஸல்) அவர்கள் (மேற்கண்ட அளவோடு) தலைப்பாகை அணிந்து வந்துள்ளார்கள் என்பது விளங்குகிறது.

**இரண்டு விதமான தலைப்பாகை:** நபி (ஸல்) சில சந்தர்ப்பங்களில் தொப்பிக்கு மேல் தலைப்பாகை அணிவார்கள். வேறு சில சந்தர்ப்பங்களில் தொப்பி இல்லாமலேயே தலைப்பாகை அணிவார்கள். சில நேரங்களில் தலைப்பாகை இல்லாமல் தொப்பி மட்டும் அணிவார்கள்.

---அல்லாமா:இப்னுல் கையிம் நூல்:ஜாதுல் மஆத்

இதன் மூலம் "திறந்த தலை என்பது அறவே நபி வழி கிடையாது" என்பதை சூசகமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு நிலைகளில் பல்வேறு விதங்களில் தலைப்பாகை அணிந்து நபி (ஸல்) அவர்கள் சமுதாயத்திற்கு சிறப்பிற்குரிய வழியை தமது செயல் மூலமாக காட்டியுள்ளார்கள்.

மேலும் பல ஹதீஸ்களில் நபி (ஸல்) அவர்கள் கட்டளையாகவும் ஆர்வமூட்டியும், வலியுறுத்தியும், சிறப்புக்களை கூறியும் முஃமின்களுக்கு தலைப்பாகை அணியும் படி அறிவுறுத்தியுள்ளார்கள்.

**இஸ்லாமியச் சின்னம்:** ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி0) அவர்களுக்கு தங்களது திருக்கரங்களால் தலைப்பாகையின் குஞ்சத்தை முதுகுக்கு பின்னால் தொங்கும்படி வைத்து தலைப்பாகை அணிவித்தார்கள். மேலும் ஸஹாபாக்களைப் பாத்து "இவ்வாறு நீங்களும் தலைப்பாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியுங்கள் ஏன் என்றால் தலைப்பாகை இஸ்லாத்தின் சின்னமாகும். மேலும் முஸ்லிம்களை முஷ்ரிக்களிடமிருந்து பிரித்துக்காட்டும் அடையாளமாகும்" என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

—அல்லாமா ஐனி நூல்:உம்ததுல் காரி ஷரஹ் புஹாரி

நபி (ஸல்) அவர்கள் தலைப்பாகையை இஸ்லாமிய சின்னம் என தெளிவு படுத்துகிறார்கள். முஸ்லிம்களுக்குரிய அடையாளம் என்கிறார்கள். இந்த தான் தோன்றி ஆய்வாளர்கள் தலைப்பாகை இஸ்லாத்தின் சின்னமும் இல்லை. ஏன் மார்க்கத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று கூறுகின்றார்களென்றால் இவர்கள் வடிகட்டின முட்டாள்கள் அல்லவா? நம் யாவரையும் வழிக்கேட்டிலிருந்து நேரான வழியில் அல்லாஹ் நடாத்துவானாக! நல்லதை நல்லதாகக் காண்பித்து அதனை முறையாகப்பின்பற்றவும், தவறைத்தவறாகவே காண்பித்து அதிலிருந்து ஒதுங்கி விடவும் நாயனே அருள்புரிவாயாக! எப்போதும் தலையில் தொப்பி அணிந்து கொள்ளாவிட்டாலும் பாகெட்டில் ஒரு சிறு தொப்பி இருக்கட்டும்.

எல்லாத் தீமைகளை விட்டும் பாதுக்காத்து நலன்கள் யாவையும் தந்தருள் நாயகனே! இதைத் தவிர தொப்பி தலைப்பாகைக்கு ஆதாரமாக 21 ஹதீஸ்களை ராவிகள், ஹதீஸ் கிரந்தங்களில் ஆதாரங்களுடன் எடுத்து எழுதியுள்ளார்கள். மேலும் விவரம் தேவைப்பட்டொருக்கு நேரில் வந்தால் ஆதார நூல்கள் தரப்படும். அல்லாஹு அ.்.லம்.


**உங்களது அச்சுவேலைகள்**
**உங்களது ஆக்க இலக்கியங்கள்**
**எதுவாக இருந்தாலும் வடிவமைத்து**
**அச்சிட்டு தருகிறோம்.**

**தொடர்புக்கு:-**

**MUFLIHAN PUBLICATION**

**5/B, MARUKONA, UKUWELA. 21300**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மையான உறவுகள்....

---- ஆர். ரஜீனா ----

வெளியே பலத்த மழை கொட்டிக் கொண்டிருந்தது; காற்றும் சுழன்று சுழன்று வீசியது; சிலவிடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன; நிலத்தில் வீழ்ந்த ஒவ்வொரு மழைத்துளியும் நீர்குமிழிகளாக மாறுவதும், இமைக்கும் பொழுதிற்குள் மறைந்தும் விடுவதாயும் இருந்தன. இவையெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்த ரகுபதிக்கு, மனிதனின் நிலையுற்ற வாழ்க்கையும் இந்நீர்குமிழிகளைப் போன்றதென்பது நன்றாகவே புரிந்தது. தன் வாழ்நாளின் முடிவை எதிர்பார்த்து நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் அவன் தன் இறந்த காலத்தை ஒருமுறை எண்ணிப்பார்த்தான்.

பதினைந்து வருடங்களுக்கு முன்; குடும்பமென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும், என்று பலரும் பார்த்து பொறாமைப்படும் நிலையிலிருந்தது ரகுபதியின் குடும்பம். லட்சுமி, சரவணன் ஆகியோரின் வாரிசுகளில் மூத்தவன் ரகுபதி; அவனைத்தொடர்ந்து மூன்று தங்கைகளும், ஒரு தம்பியும் இருந்தனர். உழவுத் தொழிலை நடத்தி வந்த சரவணன் தம் பிள்ளைகள் மேல் மிக்க அன்புள்ளவர்; அதேபோல் தான் லட்சுமியும். இப்படியிருக்கையில் தான் யாரும் எதிர்பாக்காத அந்த கொடிய நிகழ்ச்சி நடந்தது. அன்று வெள்ளிக்கிழமை. வழக்கமாக ரகுபதியின் பெற்றோர்கள் கோவிலுக்குச் செல்வது வழக்கம். அன்றும் அதேபோல்தான் போகும்போது லட்சுமி, "ரகு பிள்ளையல கவனமா பார்த்துக்கோ, வெளியில விடாதே, மழை கடுமையாக இருக்கு, நாம போட்டு வாறம்" என்று கூறிச் சென்றால்.

சிறிது நேரத்தில் அவ்வூர் கோவில் குருக்கள் மூச்சிறைக்க ஓடி வந்தார். வந்தார் "ரகு கதவ திறப்பா" என்று கூறியபடியே வெளியில் யார் யாருடனோ பலமாக ஏதேதோ பேசினார். மழையின் இரைச்சலால் அவை தெளிவாக விளங்கவில்லை. ஆம், அங்கு அம்புலன்ஸ் வண்டியிலிருந்து இரத்த வெள்ளத்தில் தம் பெற்றோரை இறக்கிக் கொண்டிருந்தனர். காரணம் மாட்டுவண்டியில் சென்றுக்கொண்டிருக்கும் போது, பாதையிலிருந்த இராட்சத வாகை மரமொன்று முறிந்து விழுந்ததே சரவணன், லட்சுமி இறப்பதற்கு வழியானது. இறுதிக் கரியைகள் உறவினர்களால் செய்யப்பட்டன. அதன் பின் குடும்பப் பொறுப்பு ரகுபதியின் தலையில் சுமத்தப்பட்டது.

தன் தந்தையின் நிலையிலிருந்த தங்கைகளையும், தம்பியையும் காப்பாற்ற தன் வாழ்க்கையையே அர்ப்பணிக்கத்துணிந்தான். பெற்றோர் இறந்தபோது தம்பி சரணுக்கு வயது ஐந்து; ரகுபதிக்கு இருபத்திரண்டு. தந்தையிடமிருந்த சொற்ப நிலத்தில் விவசாயஞ் செய்து எல்லோரையும் படிக்க வைத்தான். தாயின் பாசத்தையும் சேர்த்தே அவன் வழங்கிக் கொண்டிருந்தான். காரணம் திடீரென தாய் தந்தையரை விட்டுப் பரிந்த சரண் இரவில் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவான். பகலிலும் கூட ரகுவின் மடியிலேயே நீண்ட நேரங்களைக் கழிப்பான். இவற்றையெல்லாம் நினைக்கும் போது அவரது இதயம் சுக்கு நூறாய் உடைந்து விடுவது போலிருக்கும்.

காலதேவன் யாருக்காகவும் காத்திராமல் மிக வேகமாக சுழன்று கொண்டிருந்தான்; தன் உதிரத்தை வியர்வையாகச் சிந்தி மூன்று தங்கைகளையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தப் பின்; காலத்துக்கேற்ற மாறுதல்களுடன் அவரவர் தம் மன இச்சைப் படி நடக்கலானார்கள். மூத்தவள் ஒருத்தியின் திருமணமே இனிது நடந்தது. அதன்பின் அவள் பிறந்தகம் என்ற ஒன்றையே மறந்து விட்டிருந்தாள். இரண்டாவள்தான் சுமித்ரா தான் விரும்பிய ஒரு பேனா நண்பரோடு வெளிநாடு சென்று "செட்டில்" ஆகிவிட்டாள். தன் அண்ணனைப்பற்றி யாரும் கவலைப்பவில்லை. மூன்றாமவள் நிவேதிகா திரமணத்தின் பின் வடகிழக்குப்பக்கம் சென்றவள்தான், அவள் விலாசமே இல்லை. வயோதிப நிலையிலும், புற்று நோயினாலும் தவித்துக்கொண்டிருந்த ரகுபதிக்கு இன்னொரு இடியும் காத்திருந்தது. வெளிநாட்டு மோகத்திலும், போதைப் பழக்கத்திலும் உந்தப்பட்ட சரண் இருந்த வீட்டையும் விற்கப்போவதாகவும், ரகுபதியை வீட்டைவிட்டு வெளியேறும்படியும் கூறிவிட்டான். கழுத்தைப் பிடித்து தள்ளாக் குறையாக அவன் வெளியேற்றப்பட்டான். சில மாதங்களின் பின்தான் தெரிய வந்தது, தலைநகரிலொரு முகவர் நிலையத்தை நம்பி இருந்த பணத்தையெல்லாம் இழந்து விட்டு, பல திருட்டு வேலைகளில் ஈடுப்பட்டு தற்போது சிறைவாசம் மேற்கொண்டிருக்கின்றான் என்று. இதற்குப் பின் எத்தனையோ மாற்றங்கள்.

"டாண்" "டாண்" என்ற மாதாக்கோவில் ஓசை கேட்டு சுயவுணர்வு பெற்றான். ரகுபதி. அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. நோய் முற்றிய நிலையில் இன்றவன் "முதியோர் இல்லத்தின்" கருணையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

---முற்றும்---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒரு மீன் வியாபாரி அறிமுகமாகின்றான்

துறையூர் - முகம்மதனிபா

**'மீனே.. மீன். மீனே.. மீன்' -'மீன்காரோ... நில்லு. என்ன மீன்?' 'சாலச்சூட, என்னெ, வேனுமா?' பைசிக்கலின் பிரோக்கை அமர்த்தினான். மீன்காரனை சுற்றி ஒருபெரிய பெண்கள் கூட்டம். மீன்காரனைப் பார்த்தவர்கள் அதிசயப்பட்டார்கள். 'என்னெடா தம்பி நீயா?' என்ற கேள்வியுடன் கனிபாவை ஏற இறங்கப் பார்த்தபடி நிற்பவள், அவனுக்கு முன்பே நன்கு அறிமுகமான தங்கம்மாதான்.**

கனிபாவின் பாடசாலை நண்பனை காதரின் தாய்தன், காதர் இலங்கை வங்கியில் வேலைபெற்றுச் செல்லுமுன், பாடசாலையில் படித்த நாட்களின் போதும், இடையிடையே தங்கம்மாவின் வீட்டிற்கு போய் வந்திருந்தான். அதனாலையே அறிமுகமானவள் தான் இந்தத்தங்கம்மா.

கனிபாவோடு படித்தவர்கள் மட்டுமல்ல, கனிபாவிடம் "டியுசன்" எடுத்தவர்கள்கூட, அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்துள்ளனர். கனிபாமட்டும் தெருத்தெருவாக அலைந்து, மீன்விற்று, வயிறு நிரப்ப வேண்டியவனாக உலாவுகின்றான்.

புத்தகக் கட்டோடும், காற்சட்டையோடும் உலாவிய கனிபாவைக் கண்டவர்கள்தான், மற்றப் பெண்களும். அவர்கள் அவனைப் பார்க்கும் பார்வைகூட ஏளனமாகவே இருந்தது. காதரின் தாய் தங்கம்மாவின் கேள்வியும், கனிபா மீது படிந்த பார்வையும் அவன் நெஞ்சினுள் பாய்ந்து இதய இயக்கத்தைப் பலமாக இயக்கிவிட்டது.

"என்னெத்த செய்கிறம்மா, படிச்சது படிச்சதுதான் படிச்சத்தில ஒண்டும் கொற இல்ல, படிப்பப்பாத்து தொழில் கொடுக்கிற காலமா? இப்ப பணத்தப் பாத்துத்தான் தொழில் கொடுக்கிற காலம். எம்பிமார்களுக்கிட்ட பட்டியல் போடுகிற தரகர் வேலைக்கே பத்து பதினைந்து எண்டு பணத்தா லதான் சாதிக்கிறாங்க. ஒங்களுக் கென்ன தெரியாததா?"

கனிபா தன்வயிற்றெரிச்சலை வெளிக்கொணர்ந்ததோடு மட்டும் நிற்காது. தொழில் எடுக்க ஏற்படும் சிரமத்தையும் உணர்த்தினான். தங்கம்மா கூட மகனுக்கு வங்கித் தொழில் எடுப்பதற்காக செலவு செய்ததும், அவள் மனக் கண்ணுக்கு ஓடிவந்தது.

மீன்பெட்டியையும், கனிபா வையும் சுற்றி நின்ற பெண்கள், அவனின் மனவேதனையை நன்கு உணர்ந்து கொண்டனர் பின்னும் அவனின் மனதைப் புண் படுத்தத் துணியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்கி ரென்று ரூபாக்குத்தா" "எனக்கி ஒரு ரூபாக்கி மீன்தா" என்று மீன் கேட்கத் தொடங்கினர்.

கனிபாவும் தனது வேத னையை மனப்பொட்டகத்தில் போட்டுப் பூட்டிவிட்டு "லாபம்.. இரண்டு...மூன்று..." என எண்ணிக்கையில் ஈடுபட்டான்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

கனிபா, கல்விப் பொதுத் தராதர உயர்தரமும் சித்தியடைந்து வெளிவாரியாக பட்டத்துக்கு பதிவு செய்து படித்துக்கொண்டிருந்தான். இலக்கிய உலகிலும் புதியவனல்லன். வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன். முற்போக்குச் சிந்தனையினால் புடம் போடப்பட்டவன். இரண்டு வருடங்க ளுக்கு முன் ஏற்பட்ட, காதலி னைப்பால் தனது ஊரைவிட்டு அடுத்த ஊரில் வறிய குடும்பத்தில் துணை வியரையும் பெற்றுக்கொண்டான்.

அந்த ஊருக்குச் சொந்தமான எம்.பி.யிடம் தன் குடும்ப நிலையையும், கல்வித்தரத்தையும் பலதடவை முறையிட்டு ஒரு வாத்திப் பட்டியலில் தன் பெயரையும் புகுத்திக் கொண்டனர். ஊர் குரோதமும், பித்தலாட்டுத் தனமும் குடிகொண்ட சில நாய்களின் சேவையால் இறுதிக்கட்டத்தில் அப்பெரும் பட்டியலை விட்டகல வேறு ஒரு நபரின் பெயர் அவ்விடத்தை நிறைத்துக் கொண்டது.

"இன்று கடிதம் வரும், நாளை கடிதம் வரும்" என்று எம்பியும், அவரின் காரியதரிசியும் கனிபாவை ஏமாற்றத் தொடங்கி ஈரேழு திங்கள் உருண் டோடி விட்டன.

"ஏன்சேர் எனக்கி கடிதம் வரல்ல" என்று எம்பியிடம் கேட்டான் கனிபா. எவ்வித மூச்சும் விடாது எழுந்து உள்வீட்டுக்குள் சென்று ஒரு டேப் கொண்டுவந்து அதன் பட்டனை அமர்த்தினார். டேப்-இயங்கியது.

மே மாதம் மெதடிஸ்த் மண்டபத்துள் நடைபெற்ற கவியரங்கின் போது கனிபா பாடிய ஒரு கவிதை பதிவாகி இருந்தது. சற்று நேரம் சென்றவுடன் மீண்டும் பட்டனை அமர்த்தினார். டேப் இயக்கம் அற்றுப்போயிற்று, "இதுதான் காரணம்" என்று கூறிவிட்டு டேப்-பையும் எடுத்துக்கொண்டு உள்வீட்டுக்குள்ளே போய்விட்டார்.

கனிபா-வின் மனம் கொந்த ளித்தது. உடம்பெல்லாம் எரிகொள்ளி யாகவே இருந்தது. கவியரங்கின் போது தாசீன் மட்டுமே ஒரு டேப் வைத்திருந்தான் என்பதும் கனிபாவின் நினைவில் உலாவியது. ஒரு வகையில் தாசீன் கனிபாவுக்குத் தூரமில்லை. தூயசிந்தை இல்லாத சூட்சிக்காரர் களுக்கு சொந்தமென்ன, பந்தமென்ன?

கேவலம் நாட்டின் உண்மை நிலமையினைக் கவி பாடியதால், வாத்திப்பட்டியலிலிருந்து கனிபா-வின் பெயரும் நீக்கப்பட்டது. "தார்மீக ஆட்சி என்பது இதுதான்?" உண்மைக்கும் நேர்மைக்கும் உலைவைப்பதுதான் "தார்மீகமா"?என அவன் மனக் கோட்டையிலிருந்து வினாப்பத்திரங்கள் வெளியேறிக்கொண்டிருந்தன. தலை சுற்றுவதுபோல் கால்கள் நடக்க மறுக்கும் செய்தி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினான்கு மாதங்களாக ஏமாற்றி இறுதியில் குழியும் தோண்டிய அந்த எம்.பி.தான் என்ன "லஞ்சம்" வாங்காதவனா? பிறரின் பரிந்துரை களையும், கிட்டு வார்த்தைகளையும் லஞ்சமாக வாங்கும் இலஞ்சக் காரன்தான் - இது கனிபாவின் எண்ணம்.

அந்தக் கிராமத்தில் உள்ள வர்களுள் நல்லெண்ணம் கொண்ட உள்ளங்களைக் கண்டு பிடிப்பதற்கு பூதக்கண்ணாடிதான் வைக்கவேண்டும். கனிபா இரண்டு உள்ளங்களைக் கண்டான். ஒன்று மடிந்து போய்விட்டது. உப தபால் அலுவலகத்தின் அதிபராக இருந்தவர். மற்றதுதான் இல்யாஸ் தலைமையாசிரியராகும். பாடசாலைப் பொறுப்புக்களிலும், ஏனைய பொது விடயங்களிலும் அவர் பங்கெடுத்துக் கொள்வதால், எம். பியிடமும் நல்ல மதிப்பு இருப்பது கனிபாவுக்கும் தெரியாமலில்லை.

கனிபாவுக்காக தொழில் தேடுவதில் அந்த ஒரு மனிதருமே பயன்பட்டார். "நான் போய் உனக்கு தொழில் தரவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறுகின்றேன்" - எனக் கூறி கனிபாவின் வைசிக்களை அடிக்கடி பெற்றுக்கொண்டு செல்வார். பல நாட்கள் இப்படி நடந்தேறியபின், ஒருநாள் காலையில் வைசிக்களைப் பெற்றுக்கொண்டு சென்றவர், மதிய நேரம் வந்தார். "பின்னேரம் எம்.பி. சொன்ன உன்னை வரட்டாம். போகக்கள என் மகன் சுனைத்தையும் கூட்டிக்குப் போ" என்றார்.

தலைமையாசிரியரின் விஜயம் வெற்றியில் முடிந்ததாக எண்ணி கனிபாவின் முகமும், இதயமும் மலர்ந்தன. இல்யாஸ் ஒரு கவிஞன். கனிபா அந்தக் கிராமத்தில் நுழையும் முன்பே தெரிந்தவர். அவரின்மேல் அவருக்கு ஒரு தனிப்பற்றுதல். அதுபோல் அவரும் கனிபாவின் மீது இரக்கமுடையவராகவே இருந்தார். அடிக்கடி கனிபா அவரின் வீட்டுக்குச் சென்று தனது கவிதைகளை அவரினால் திருத்தியும் உள்ளான். இந்த இலக்கிய தொடர்பே கனிபாவுக்காக அவர் எம்.பியிடம் போகின்ற அளவுக்கு வளர்த்து விட்டது என்பதே கனிபாவின் எண்ணம்.

இல்யாஸின் வேண்டுகோள் எம்.பி.யின் மனதை இலகு படுத்தியிருக் கலாம். அதுதான் அவர் வரும்படி சொல்லியிருக்கிறார் என்று எண்ணிக் கொண்ட கனிபா, சுனைத்தையும் அழைத்துக்கொண்டு சாய்பொழுதில் எம்.பி.யின் இருப்பிடம் சென்றான்.

"என்ன சேர் வரச்சொன்னீங் களாம்.......”- கனிபா மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டான். "ஆர் வரச்சொன்ன? நானா? இல்லியே. சுனைத்-தைத்தான் வரச்சொன்னன்" என்று கூறியதோடு சுனைத்தையும் அழைத்துக் கொண்டு, உள்வீட்டுக்குள் போனார். இரண்டு கிழமைக்குள்ளேயே சுனைத்-துக்கு இலங்கை போக்கு வரத்துச் சபை-யில் வேலையும் கிடைத்து விட்டது.

இல்யாஸ்-தலைமையாசிரியர், கனிபாவுக்காக எம்.பி.யின் வீட்டிற்குப் போகும் பணியும் தணிந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்ல விளையாடும் போதும் வெல்ல விளையாடு" என்ற முதுமொழியைத்தான், தன் வேத வாக்கியமாகவே இல்யாஸ் கடைப் பிடித்துள்ளார் என்று மிக இலகுவான முறையிலேயே கனிபா புரிந்து கொண்டான்.

அரசாங்கத்தில் தொழில் செய்வதென்றால், ஒன்றில் பணம் வேண்டும் அல்லது நிறையச் சனம் வேண்டும். இரண்டுமில்லாமல் எவ்வளவுதான் படித்தும் பயனில்லை என்று அவன் மனம் குசுகுசுத்தது.

எப்படியும் அந்தக்கிராமத்தில் கனிபா கருதிய ஏதாவது ஒரு தொழில் செய்யவேண்டிய கடன் நாளுக்கு நாள் கனிபாவை துன்பப்படுத்திக்கொண்டே இருந்தது. அரசாங்கத் தொழில் தேடும் வேலையை நிறுத்திவிட்டு, மீன் வியாபாரியாக மாறினான்.

அன்றாட வாழ்க்கையைப் போக்க அவன் கடைப்பிடித்த தொழிலால் கிடைக்கும் வருமானம் போதாதிருந்தது. பற்றாக்குறை வாழ்க்கையே நடாத்தினான்.

ஒவ்வொரு தெருவிலும் அவனைத் தெரிந்தவர்கள் சந்திக்கும் போதெல்லாம் "ஏன் தம்பி உனக்கு இன்னமும் தொழில் கிடைக்கல்லியா"? என்பார்கள். அவனின் கல்வித்தரத்தைத் தெரிந்தவர்கள் ஏளனம் செய்வார்கள். "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்"-என்ற முதுமொழிக் கொப்பவே நடந்து கொள்வான்.

அவனுக்கும் சில நேரம் வெட்கமாகவும், துக்கமாகவுமே இருக்கும். களவு, பொய் இல்லாமல் எத்தொழிலையும் செய்து சீவிப்பதில் எவ்வித கௌரவமும் குறைவதில்லை என எண்ணித் தன்னைச் சரிசெய்து கொள்வான்.

சிலநாட்களாக கனிபாவின் செயற்பாட்டினைக் கண்ணுற்ற கந்தப்பு, அவனை அழைத்துக் கொண்டு, கனிபாவுக்கு ஒரு தொழில் கிடைக்க வழி செய்யுங்கள் என்று விண்ணப்பம் செய்தார். கந்தப்புவின் வேண்டுதலுக்கு ஏதேதோ கூறி சமாளித்தான் எம்.பி. ம.ஃ.றூப். ஆங்கில வார்த்தைகள் அடிபிடிப்பட்டதால், கனிபாவுக்கு எல்லா உரையாடலும் விளங்கவில்லை.

கந்தப்பு-வின் முகபாவனை யிலிருந்து, தனக்குள் தனக்கு தொழில் கிடையாது என்பதை மட்டும் ஊகித்துக்கொண்டான். கந்தப்பு எழுந்து கனிபாவையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

"தம்பி இவரு ஊர்க்குரோதம் காட்டுகின்றார். தொழில் தர மாட்டாராம். ஒங்கட ஊரு எம்.பி.யிடம் போய்க் கேள். இவனுக்கிட்ட வரத்தேவையில்ல. ஊரில உள்ளவர்களுக்கெல்லாம் வேல கொடுத்த பிறகுதான் ஒன்ன பார்க்கனுமாம்"

கந்தப்புவின் முகத்தையே பார்த்து நின்ற கனிபாவுக்கு "ஒட்டார் பின் நின்றொருவன் நிற்றலில் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று" என்ற திருக்குறளே நினைவிற்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சமுதாயத்தில் பணத்துக்கே மதிப்பு மனிதனுக்கல்ல. தேர்தல் காலங்களில் மட்டும் எங்களை ஏமாற்றி ஓட்டுக்கேட்க மட்டுமே நாங்கள் சாதியும் சனமுமாவோம். பின்பு நாங்கள் இவர்களை கெஞ்சியும் அவாகளின் தலைக்கனமே பெருத்து நிற்கும். இவர்கள்தாம் மக்களின் பிரதிநிதிகள்-துரோகிகள்".-என்றெல்லாம் வாயினால் வெளியேறாதவாறு கனிபா விலாசித் தள்ளினான்.

"நான் செய்கின்ற மீன் வியாபாரமே போதுமானது. இந்தத் தம்மிஸ்டர்கள் தொலையும் வரை"......... என்றவாறு, கந்தப்புவிடம் "வாறேன் சேர்" என்று விட்டு நடக்கலானான்.

"இன்னும் ஆருக்கு வேனும்?"-குரலெழுப்பினான். ஒருவரும் பேசவில்லை. மீன்வாங்க இவ்விடத்தில், இனி யாருமில்லை என்பதை உணர்ந்து கொண்டான். வைசிக்கி லைத் தள்ளிக்கொண்டு "மீ.....னே.... மீன் மீ......னே....... மீன்" எனத் தன் குரலொலிகளைக் காற்றில் தவழவிட்ட வண்ணம் வைசிக்கலின் பெடிலைக் காலால் உதைக்கலானான்.

மீ.........னே........ மீன். மீ.......னே.........மீன்.

(உண்மை சம்பவம் பெயர்கள் யாவும் கற்பனை)


## ஆசிரியர் குழு

*ஆசிரியர்*

கலைத்தொண்டன். எம். ஏ. எம். முஹம்மத் அமானுல்லா

*உப ஆசிரியர்*

எஸ். எம். இத்ரீஸ் (ஈழக்குயில்)

*Computer Type Setted By:*

**Windows Systems - Warakamura,**

Tel: 066 - 44655

*Prinded by:*

**Muflihan Publication**

5/B, Marukona, Ukuwela. 21300




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வெளியீடுகள் வேண்டுமா?

'அந்-நுஸ்ரத்', பொது நூலக வீதி,
மருதமுனை வெளியீடுகளும், 'முப்லிஹன் வெளியீட்டகத்தின்
வெளியீடுகளும், இஸ்லாமிய ஒட்டுப்படங்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
இலங்கை எங்கும் ஏஜன்டுகள் தேவை.
'தூய ஹோமியோபதி' (வைத்திய சஞ்சிகை)
'கவிக்குயில்' (கவிதை சஞ்சிகை)
தயாராகின்றது.

**MUFLIHAN PUBLICATION, 5/B, MARUKONA, UKUWELA. 21300**

---

உங்கள் நோயை நீங்களே கண்டுபிடித்து தேவையான சிகிச்சையைப் பெறும் வண்ணம் "வீட்டுக்கொரு வைத்தியரை" உருவாக்கும் நோக்கோடு "ஹோமியோபதி" வைத்திய துறையில் பயிற்சியளிக்கத் தயாராகின்றார்

பிரபல ஹோமியோபதி வைத்தியர்
ஜனாப். எஸ். எம். இத்ரீஸ்.

இன்றே உங்கள் பெயர்களை எழுத்து மூலம் விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**A BAWA GROUP ENTERPRISES**
**5/B, MARUKONA,**
**UKUWELA. 21300**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் அழைக்கின்றோம்

நாட்டு நலனுக்காக பாடுபட்டு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி
1997.07.03 இல் காலஞ்சென்ற தியாகி
M. B. ஆதம்பாவா (P.C.29640) அவர்களின்
இரண்டாவது ஆண்டு நினைவாக ஆரம்பிக்கப்படுவதே

**'ஏ பாவா குரூப் என்டபிரைஸ்'**

எனப்படும் ஸ்தாபனமாகும்.

இந்த ஸ்தாபனம் தொழில், தொழில் பயிற்சி,
தொழில் ஆய்வு ஆகியவற்றை
நோக்கமாகக் கொண்டு
"உயர் தொழில் நுட்பக் கல்வி"யை
மையமாகக் கொண்டு செயல்படும் ஒன்றாகும்.

* **உங்களுக்குத் தெரிந்த தொழில் துறையில் பயிற்சியளிக்க விரும்புகிறீர்களா?**
* **உங்களுக்கு விருப்பமான தொழில் துறையில் பயிற்சிபெற விரும்புகிறீர்களா?**
* **உங்களுக்குப் பரீட்சியமான தொழில் துறையில் ஆய்வு நடாத்தி புதிய அணுகு முறைகளைக் கண்டு பிடிக்க விரும்புகிறீர்களா?**

இன்றே எழுத்து மூலம் விண்ணப்பித்து உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**A BAWA GROUP ENTERPRISES**
**5/B, MARUKONA,**
**UKUWELA.21300**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org